மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 30 வியாழக்கிழமை (14.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 239

# முழங்காவிலை கைப்பற்றியதாக இராணுவம் நேற்று அறிவிப்பு

## கல்விளானும் தம்வசமாம்

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் உள்ள கல்விளான் சிற்றூரையும் கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குக் கரையோரத்தில் உள்ள முழங்காவில் பகுதியையும் விடுதலைப்புலிகளிடமிருந்து நேற்றுக் கைப்பற்றியிருப்பதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்மாற்றிகளுக்கு இராணுவப் பாதுகாப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள மின்மாற்றிகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொக்குவில் ஆடியபாதம் வீதியிலுள்ள மின்மாற்றி நேற்று முன்தினம் எரிக்கப்பட்டுள்ளதையடுத்தே இப் பாதுகாப்பு நடைமுறை அமுலுக்கு வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கொக்குவில் மின்மாற்றி சேதமாக்கப்பட்டுள்ளதால் அப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லைக்குமரன் மலர்-16 வெளியீட்டு விழா நாளை




(யாழ்ப்பாணம்)

நல்லூர் மஹோற்சவ காலத்தில் யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மலரின் 16-வது இதழ் நாளை வெளியிட்டு வைக்கப்படும்.

யாழ்.மாநகர (12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் ஆதரவு இல்லையாயின் அது அரசாங்கத்தின் பலவீனமே



## நாராயணனின் கருத்துக்கு கோத்தபாய பதில்

(புதுடில்லி)

தமிழ் மக்களின் ஆதரவில்லையாயின் அது அரசாங்கத்தின் பலவீனமே என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எமது உண்மையான அக்கறையையும் நேர்மைத் தன்மையையும் வெளியுலகிற்குக் காட்ட நாம் தவறிவிட்டோம் என இந்தியாவின் ஐ.ஏ.என். எஸ். செய்தி சேவைக்கு வழங்கிய தொலைபேசிச் செவ்வியிலே பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் இலங்கை அரசாங்கத்தின் பக்கம் இல்லை எனவும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. வேட்பாளர் தாக்கப்பட்டுள்ளார்

(கொழும்பு)

ஐ.தே.கவின் சப்ரகமுவ மாகாண முதன்மை வேட்பாளர் ரஞ்சன் ராமநாயக்க நேற்று மாலை அரச தரப்பு ஆதரவாளர்களால் தாக்கப்பட்டுள்ளார்.

சுமார் 200 பேரைக் கொண்ட குழுவினர் ரஞ்சன் ராமநாயக்க பயணம் செய்த வாகனத்தைச் சுற்றிவளைத்து கற்களால் தாக்கியதில் அவர் காயமடைந்துள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதில் 7 வாகனங்கள் முற்றாகச் சேதமடைந்திருப்பதாகவும் ஐ.தே.க. தேசிய அமைப்பாளரும் சப்ரகமுவ (12 ஆம் பக்கம் பார்க்க)

# இரசாயன ஆயுதங்களை கொண்டு பிரபாகரனினால் தாக்க முடியாது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி அரச படையினர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் ஆற்றல் விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனிடம் இல்லை என இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டுமாயின் ரஷ்யா அல்லது அமெரிக்க படைகளுக்கு நிகரான படை பலம் ஒன்று இருக்க வேண்டும்.

அரச படையினரின் வலிந்த தாக்குதல்களை எதிர்கொள்ள முடியாமல் பின்வாங்கும் விடுதலைப்புலிகளிடம் இரசாயன ஆயுதங்கள் காணப்படக் கூடிய சாத்தியம் இல்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இறுதி முயற்சியாக பிரபாகரன் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தக் கூடும் என தமிழ் மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கச்சதீவில் இந்.தேசிய கொடியை ஏற்றப் போவதாக எச்சரிக்கை

(சென்னை)

இந்திய சுதந்திர தினமான ஓகஸ்ட் 15 ஆம் திகதி கச் சதீவில் இந்திய தேசிய கொடியை ஏற்றப் போவதாக இந்து மக்கள் கட்சி எச்சரித்துள்ளது.

இந்து மக்கள் கட்சியின் தமிழக இராமநாதபுர மாவட்டத்தின் செயலாளரும் மாநில இளைஞர் அணி செயலாளரும் இணைந்து விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

74 ஆம் ஆண்டு இலங்கை-இந்திய அரசாங்கங்களுக்கிடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை வசம் ஒப்படைக்கப்பட்ட கச்சதீவை மீட்குமாறு தமிழகத்தில் அண்மைக்காலமாக அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு சூழ்நிலையிலேயே இந்து மக்கள் கட்சி இந்த அறிக்கையை விடுத்துள்ளது. கச்சதீவுப் பிரதேசத்தில் தமிழக மீனவர்கள் தொடர்ந் (12 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள்கள் வன்னிக்கு அனுப்பி வைப்பு

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டத்திற்கு அத்தியாவசியப் பொருள்களும் மண்ணெண்ணெயும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் சி.சண்முகம் தெரிவித்துள்ளார்.

20 லொறிகளில் அத்தியாவசியப் பொருள்களும் மண்ணெண்ணெயும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இன்று அவை அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை வன்னிப் பிரதேசத்திற்குப் பொருள்களைக் (12 ஆம் பக்கம் பார்க்க)

# பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் இரண்டாவது தடவையாக தீ விபத்து

## 75 குடும்பங்கள் வாழ்விடங்களை இழந்தன

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் அந்தத் தொகுதியின் முதலாம், ஐந்தாம் யுனிட்டுகளைச் சேர்ந்த 10 மண்டபங்கள் எரிந்து தரைமட்டமாகியுள்ளன.

இதன் காரணமாக 75 குடும்பங்கள் வாழ்விடங்களையிழந்து நிர்க்கதியாகியிருப்பதாக வவுனியா அரசாங்க அதிபர் எஸ்.சண்முகம் தெரிவித்தார்.

இந்தக் குடும்பங்களைச் சேர்ந்த 250 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தெய்வாதீனமாக இந்தத் தீ விபத்தில் எவருக்கும் காயமோ உயிரிழப்போ ஏற்படவில்லை. பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் கடந்த 17 ஆம் திகதி ஏற்பட்ட தீ விபத்தொன்றில் 11 மண்டபங்கள் எரிந்து தரைமட்டமாகியிருந்தன.

இதனால் 125 குடும்பங்கள் வரையில் வாழ்விடங்களையிழந்து பாதிக்கப்பட்டார்கள். இருவர் காயமடைந்தனர். அவர்களுக்கான வாழ்விடங்களை (12 ஆம் பக்கம் பார்க்க)





வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கம், அகில இலங்கை பாடசாலைகள் கூடைப் பந்தாட்ட சங்கத்தோடு இணைந்து யாழ்.புனித பரியோவான் கல்லூரியில் நடாத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான கூடைப்பந்தாட்ட போட்டியில் அணிவீரர்கள் அறிமுகம் செய்யப்படுவதையும், சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட யாழ்.மத்திய கல்லூரி,இரண்டாம் இடம்பெற்ற யாழ்.புனித பரியோவான் கல்லூரி வீரர்களுடன் யாழ்.மாவட்ட பாடசாலைகள் கூடைப்பந்தாட்ட சங்கத் தலைவரும் யாழ்ப்பாணக் கல்லூரி முதல்வருமான என்.ஏ.விமலேந்திரன் 'மற்றும் பொறுப்பாசிரியர்கள் காணப்படுவதையும் போட்டியில் ஒரு காட்சியையும் படங்களில் காணலாம். *(படங்கள்:கோபி)*

# பொங்கல் விழா

(சில்லாலை)

வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தின் அனர்த்த முகாமைத்துவ திட்டத்தின் கீழ் சங்கரத்தை விவசாய சம்மேளனத்தின் வேண்டுகோளிற்கிணங்க கமநல அபிவிருத்தி திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிவுரைக்கமைய 28 நாட்கள் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று (11.8.08) திங்கட்கிழமையுடன் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

குளப்புனரமைப்பு வேலைகளின் நிறைவை ஒட்டி பாரம்பரிய முறையில் பொங்கல் விழாவும் குளத்தினை வைபவரீதியாக சம்மேளனத்திடம் ஒப்படைக்கும் நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சங்கரத்தை நாகதம்பிரான் கோயிலில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவன அனர்த்த முகாமைத்துவ திட்டமுகாமையாளர் கு.செங்குட்டுவன் தெரிவித்துள்ளார். (ஓ-58)

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்துசமயகலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு நடாத்தப்படும் ஆன்மீக சொற்பொழிவில் அம்பிகை வழிபாடு எனும் தலைப்பில் எஸ்.சஜீவனீன் கருத்துரை இடம்பெறும்.

இந்த நிகழ்வு இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ச)

## கதிரைமாதா ஆலய திருநாள் திருப்பலி

சில்லாலை கதிரைமாதா ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலி நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பங்குத் தந்தை வண.பிதா யூட் நிக்சன் தலைமையில் இடம்பெறவுள்ளது. யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொண்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கவுள்ளார். தொடர்ந்து திருச்சொரூப பவனியும் இடம்பெறவுள்ளது. (ச-58)

## சந்தேக நபர்கள் அறுவர் மாத்தளையில் கைது

(கொழும்பு)

மாத்தளை உக்குவளை பிரதேசத்தில் பதுங்கியிருந்த ஆறு சந்தேக நபர்களை மாத்தளைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவர்களிடம் இருந்து சி 4 ரக வெடி பொருட்கள் 13 கிலோகிராம், டெட்டனேட்டர் 30,சயனைட் வில்லைகள் 06 மற்றும் குண்டு தயாரிக்கப் பயன்படுத்தும் பொருட்கள் என்பவற்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

பொதுமகன் ஒருவர் வழங்கிய இரகசியத் தகவல் ஒன்றை அடுத்து மாத்தளைப் பொலிஸார் நேற்று முன்தினம் நடத்திய தேடுதலின் போதே இந்தச் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பஸ் குண்டு வெடிப்புக்கள் மற்றும் ட்ரான்ஸ்போமர்கள் மீதான குண்டுத் தாக்குதல்கள் என்பவற்றுடன் இச் சந்தேக நபர்களுக்கு தொடர்பு உள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# உதைபந்தாட்டம்

(பருத்தித்துறை)

மாலிசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்தின் 15-வது ஆண்டு விழாவை யொட்டி பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையேயான ' அரை இறுதிபோட்டியில் இன்று பிற்பகல் 4.00மணிக்கு வதிரி டைமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம் மோதுகின்றது. (ச-52)


## மணப்பெண் தேவை

திருமணமாகி,மனைவியை இழந்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணமகனுக்கு 39-46 வயதுக்குட்பட்ட கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண் தேவை. சுனாமியால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்பவர்களிடமிருந்து சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. விதவைகளும் விண்ணப்பிக்கலாம். மேல் விபரங்களை நேரில் பேசலாம். விண்ணப்பங்களை 31.08.2008ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 1550
மே/பா வலம்புரி,
இல.03,02ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். (550)

## உடன்தேவை

நல்லூர் சுற்றாடலில் அல்லது யாழ். நகரில் வேறாக சமையலறை,மலசலகூடம், பைப் வசதிகளுடன் ஒரு பெண்மணி வசிக்கக் கூடிய வசதியுள்ள ஓர் அனெக்ஸ் உடனடியாக வாடகைக்குத் தேவை.

*தொடர்பு:-* விளம்பர இல. 1549
மே/பா வலம்புரி,
இல.03,02ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (549)

## மருத்துவமனை உதவியாளர் தேவை

மருத்துவமனையில் உதவியாளராக கடமையாற்றுவதற்கு 35-48 வயதுக்குட்பட்ட பெண் பணியாளர் தேவை. உணவும் தங்குமிட வசதியும் வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். 31.08.2008 ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. 1550
மே/பா வலம்புரி,
இல.03,02ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட்,
யாழ்ப்பாணம். (550)

# நல்லைக்குமரன் மலர் -16

## வெளியீட்டு விழா 2008

காலம்:- 15.08.2008 (வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணி
இடம்:- நாவலர் கலாசார மண்டபம்
தலைவர்:- திரு.மு.செ.சரவணபவ (சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும், மாநகர ஆணையாளரும்)

## நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| தேவாரம்:- 10.00 | ராதிகா இரகுநாதன் |
| 10.10 | மன்றகீதம் |
| வரவேற்புரை:- 10.15 | திரு.இ.இரத்தினசிங்கம்<br>செயலாளர்,சைவசமய விவகாரக்குழு |
| தலைமையுரை:- 10.20 | தலைவர் |
| ஆசியுரை:- 10.30 | ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்<br>நல்லை ஆதீன முதல்வர்<br>சுவாமி சித்ரூபானந்தா அவர்கள்<br>ஸ்ரீ சாரதாதேவி சேவாச்சிரமம், பருத்தித்துறை |
| வாழ்த்துரை:- 10.45 | திரு.க.கணேஷ்<br>யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர்<br>திரு.C.V.K சிவஞானம் (முன்னாள் மாநகர சபை ஆணையாளர்)<br>திருமதி பத்மினி சிவலிங்கம்<br>(பிராந்திய ஆணையாளர், யாழ்ப்பாணம்) |
| கௌரவிப்பும் யாழ். விருது வழங்கலும் 11.00 | யாழ்.விருது பெறுபவர்<br>வைத்தியகலாநிதி திருமதி ஜெயதேவி கணேசமூர்த்தி<br>(சிரேஷ்ட விரிவுரையாளர்,மருத்துவபீடம் யாழ்.பல்கலைக்கழகம் வருகை தரு பொது மருத்துவ நிபுணர், யாழ்.போதனா வைத்தியசாலை) |
| பதிலுரை:- 11.10 | கௌரவிக்கப்படுவர் |
| மலர் வெளியீடும்,வெளியீட்டுரையும்:- | திரு.ந.விஜயசுந்தரம்<br>கௌரவ பதிப்பாசிரியர் |
| முதற்பிரதி பெறுவோர்:- 11.30 | தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் |
| ஆய்வுரை:- 11.45 | திரு.சி.சிவசரவணபவன், (சிற்பி), எம்.ஏ<br>முன்னாள் அதிபர்,யாழ்./வைத்தீஸ்வரக் கல்லூரி |
| நன்றியுரை:- | திரு.து.சோமசுந்தரம்<br>பொருளாளர், சைவசமய விவகாரக் குழு |

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

*சைவசமய விவகாரக் குழு*
*யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்*

(இ-010)


## எதிராளிக்கு அழைப்புக் கட்டளை.

**இல.16 பிரிவு 55 (1).**

**யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்**

ரகுவரன் பெண் திருவேணி.
மஞ்சவனப்பதி வீதி,கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
-வழக்காளி-

வழக்கு இல:- மணநீக்கம் /866.

எதிராக.
ராமசாமி ரகுவரன்
கனகசபை வீதி, மானிப்பாய்.
தற்போது-தெரியாது.
-எதிராளி-

மேற்சொல்லப்பட்ட எதிராளிக்கு,

வழக்காளி தமக்கும், உமக்குமிடையே நடைபெற்ற விவாகப் பதிவை இரத்துச் செய்வதற்காக,

இந் நீதிமன்றில் உமக்கு எதிராக மணநீக்கம் கோரி வழக்குத் தொடர்ந்துள்ளாராதலால், அதற்கு, உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2008ம் ஆண்டு புரட்டாதி மாதம் 01ம் திகதி கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மறுமொழி கோப்பிடத் தவறும் பட்சத்தில் இவ் வழக்கானது மறு கட்சிக்காரர் இல்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படும் என அறிந்து கொள்ளுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர். பதிவு பெற்ற சட்டத்தரணி மூலம் நீர் தோன்றாவிடில் சட்டமுறையான எல்லா அறிவித்தல்களையும் அனுப்பக் கூடிய முகவரி ஒன்றை கூறும் விபரக் குறிப்பை கோப்பிடும்படி நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

2008ம் ஆண்டு ஆடி மாதம் 30ம் திகதி

தயாரித்தது.
**வழக்காளியின் சட்டத்தரணி**

**நீதிமன்றிக் கட்டளைப்படி**
**து.சிறீமோகன்**
**பதிவாளர்**

*குறிப்பு:-* விளக்கத் திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க மன்றில் இவ்வழக்கு கூப்பிடும் திகதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெற விரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரி ஒன்றை இந் நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்து உதவுமாறு பதிவஞ்சல் மூலம் அனுப்புவதற்காகவும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளை கொடுக்குமாறும் எண்பதாம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**து.சிறீமோகன்**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-1405)

# இன்று ஒரு தகவல்

## ஒரு விசித்திர வழக்கு!

இன்றைய உலகத்தில் சுவாரஸ்யமான சம்பவங்களெல்லாம் கண்முன் நடந்து கொண்டிருக்கிறது. பிரான்சில் நடந்த சம்பவம் இது. ஒரு பூறையில் கார்மோதி எரிந்து போய் விட்டது அதில் போனவரும் காலியாகி விட்டார்.

உடனே பொலிஸ் அந்த இடத்துக்கு விரைந்து கார் நம்பரைப் பார்த்து ஆள் யார் என்று கண்டு பிடித்தார்கள் அவருடைய வீட்டுக்குத் தகவல் கொடுத்தார்கள். அந்த ஆளுக்கு ஒரு மனைவி... ஒரு காதலி, ஆக இரண்டு பேர்... இருவரும் சண்டை பிடிக்காமல் ஒற்றுமையாக இருந்தார்களாம்.

நடந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட இருவரும்உடனே கறுப்புஉடை அணிந்து கொண்டு விபத்துநடந்த இடத்துக்கு வந்தார்கள். கருகிப் போன சடலத்தைப் பார்த்தார்கள்.

அது எங்களுடைய கணவர் தான் என்று அடையாளம் காட்டினார்கள். அதன்பின் முறையான பிரேத பரிசோதனை நடந்து அந்த ஆள் விபத்தினால் இறந்து போனதாக அதிகாரிகள் கூறினார்கள். அவர்களும் சடலத்தை பொறுப்பேற்று எரித்து விட்டார்கள். இறந்து போனவர் மூன்று கம்பனிகளில் 8 ஆயுள் இன்சூரன்ஸ் பொலிஸி எடுத்திருந்தாராம்.

அதில் இரண்டு கம்பனிகள் அவருடைய மனைவிக்கு இன்சூரன்ஸ் பணத்தைக் கொடுத்து விட்டன. ஒரு கம்பனி மட்டும் கொடுக்காமல் கொஞ்சம் தாமதமாக்கி கொண்டே வந்தது.

அந்தக் கம்பனி தனியார் துப்பறியும் நிறுவனத்திடம்ஒரு துப்பறியும் நிபுணரை வாடகைக்கு அமர்த்தி அந்த ஆள் ஆளின் மனைவியையும் -காதலியையும் கண்காணிக்கும்படி பணித்தது.

அந்த நிபுணர் விபத்து சம்பந்தமான குறிப்புக்களையெல்லாம் பார்த்தார். கார் தீப்பிடிக்க எந்தக் காரணமும் இல்லை என்பது தெரிந்தது. கருகிப் போன சடலத்தின் பல் அமைப்பு சம்பந்தமான குறிப்புகளையும் பார்த்தார்.

இறந்தவராகக் கூறப்பட்டவரின் மனைவியும் காதலியும் தொலை பேசி மூலமாக பேசிக் கொள்வதையெல்லாம் ரகசியமாக ஒட்டுக் கேட்டார். எல்லாவற்றையும் வைத்து கவனிக்கும் போது காரில் இறந்து போனது உண்மையிலேயே அந்த ஆள் இல்லை என்பது தெரிந்து விட்டது! அப்படியானால் அந்த ஆள் எங்கே?

அந்த ஆசாமிக்கு 46வயது இருக்கும். அவனைக் காணவில்லையே... ஆனால் மனைவியுடனும் காதலியுடனும் வேறொரு இளைஞன் அடிக்கடி பேசுவதைக் கவனித்தார்கள்.

ஒரு நாள் திடீரென பிடித்து விசாரிக்கையில், இந்த இளைஞன் தான் அந்த ஆள் என்பது தெரிந்தது! என்ன விஷயம் நடந்தது தெரியுமா? இந்த ஆள் முதலில் ஒரு ஆஸ்பத்திரியில் வேலைபார்க்கும் சிநேகிதனிடம் போய் ஏதாவதொரு அனாதை சடலம் கிடைக்குமா என்று கேட்டிருக்கிறான்.

இந்த சமயம் பார்த்து ஆஸ்பத்திரியில் அப்படி எதுவும் இருக்கவில்லை. உடனே இரண்டுபேரும் சேர்ந்து ஒரு பிளான் பண்ணி ஒரு பிச்சைக்காரனை அழைத்துவந்து அவனுக்கு அளவுக்கு மீறி தூக்க மாத்திரை கொடுத்து காலி பண்ணி... அவனைத் தனது காரில் வைத்து கொண்டு போய் ஒரு பாறையில் மோதவிட்டு தீயும் வைத் திருக்கிறார்கள்.

அதன் பின் அந்த ஆள் பிளாஸ்டிக் சேர்ஜரி செய்து தன் முகத்தை அடையாளம் தெரியாமல் மாற்றி விட்டானாம். எப்படியிருக்கிறது இந்த ஏமாற்று வேலை?

அவன் திட்டம் மட்டும் நிறைவேறியிருந்தால் சுமாராக ஒரு எட்டுக்கோடி அவனுக்குக் கிடைத்திருக்கும். மாட்டிக் கொண்டதால் இப்பொழுது ஆயுள் தண்டனை அனுபவித்துக்கொண்டிருக்கிறானாம்.

இந்தக் காலம் எப்படி இருக்கிறது என்றால்... தவறு செய்பவனும் புத்திசாலித்தனமாக அதைச் செய்கிறான். கொள்ளையடிப்பவனும் புத்திசாலித்தனமாகக் கொள்ளையடிக்கிறான். அதனால் நாம் அதைவிடப் புத்தி சாலித்தனமாக இருந்து அதை சமாளிக்க வேண்டியிருக்கிறது.

(வெளிநாட்டில்) ஒரு அம்மா இன்சூரன்ஸ் கம்பனியைத் தேடி வந்தாராம். வந்து அங்கிருந்த அதிகாரியைப் பார்த்து, "ஏன் சார்... இன்றைக்கு எனது கணவரின் உயிரை இன்ஷூர் பண்ணிக் கொண்டு, நாளைக்கு அவர் செத்துப்போனால் எனக்கு ஏதாவது கிடைக்குமா?" என்று கேட்டிருக்கின்றார். 'கிடைக்கும்!' என்றார் அவர். "என்ன" என்று கேட்டார் இவர். 'ஆயுள்தண்டனை' என்றாராம் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வேலையற்ற பட்டதாரிகளின் பேரணி மீது பொலிஸார் தாக்குதல்; ஐவர் காயம்

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கொழும்புகோட்டை பகுதியில் நேற்று முன்தினம் நடத்திய ஆர்ப்பாட்டப் பேரணியை பொலிஸார் தாக்குதல் நடத்தி கலைத்தனர். இதன் போது ஐவர் காயமடைந்துள்ளனர். அரசாங்கம் வாக்குறுதி அளித்ததைப் போன்று தொழில் வழங்கப்படாமையினை கண்டித்து பல நூற்றுக்கணக்கான வேலையற்றபட்டதாரிகள் கொழும்புகோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இவர்கள் ஜனாதிபதி செயலகத்தில் உள்ள நிதியமைச்சில் மகஜர் ஒன்றினை கையளிப்பதற்காக அங்கிருந்து ஜனாதிபதி செயலகம் வரை பேரணியாகச் செல்ல முயன்றனர்.

கோட்டை செரமிக் சுற்று வட்டம் வரைசென்றஆர்ப்பாட்டக்காரர்களை வீதித் தடைகளைப் போட்டு பொலிஸார் வழிமறித்தனர். தடைகளையும் மீறி வேலையற்ற பட்டதாரிகள் செல்ல முயன்ற போது பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுத் தாக்குதலை நடத்தி இவர்களைக் கலைத்தனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியையடுத்து கொழும்பு கோட்டைப் பகுதியில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததுடன்போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டம் குறித்து கருத்து தெரிவித்த வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் அமைப்பாளர் சுஜித் குருவிட்ட தெரிவித்ததாவது,

25 ஆயிரம் வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர். இவர்களில் 15 ஆயிரம் பேருக்கு 2008 ஆண்டு ஜூன் மாதத்திற்கு முன்பதாக வேலை வாய்ப்புகளை வழங்குவதாக கடந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தின் போது அரசாங்கம் உறுதி மொழி வழங்கியது.

ஆனால் இன்று வரை உறுதி மொழி நிறைவேற்றப்படவில்லை. இந்த ஆண்டின்வரவு செலவு திட்டமும் முன்வைக்கும் காலம் வந்து விட்டது. இது வரையில் எமது வேலை வாய்ப்புக்கள் தொடர்பாக அரசாங்கம் அக்கறைசெலுத்தவில்லை.

எனவே எமது சங்கத்தின் ஆயிரம் உறுப்பினர்கள் இணைந்து கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தி விட்டு நிதி அமைச்சுக்கு மகஜரொன்றை கையளிப்பதற்காக ஊர்வலமாக வந்தோம்.

இதன் போது லோட்டஸ் வீதியில் தடுக்கப்பட்டு பொலிஸார் தாக்குதல் நடத்தி விரட்டியடித்தனர். இத்தாக்குதல்களில் எமது உறுப்பினர்கள்ஐவர் சிறு காயங்களுக்கு உள்ளானார்கள்.

இத்தோடு எமது போராட்டம் முடியப் போவதில்லை எதிர்வரும் காலங்களில் ஆயிரக்கணக்கான வேலையற்ற பட்டதாரிகளை இணைத்துக் கொண்டு வீதிப் போராட்டங்களை நடத்துவோம். எமக்கு நியாயம் கிடைக்கும் வரை போராட்டம் ஓயாது என்றார். (அ-6)

# பற்றரிகள், அலுமினியம் என்பவற்றை எடுத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும்

## வவுனியா, மன்னார் அரச அதிபர்கள் கோரிக்கை

(கொழும்பு)

மதவாச்சி சோதனைச் சாவடி ஊடாக மன்னார், வவுனியா நகரப் பகுதிகளுக்கு பென்டோச் பற்றறி, அலுமினியத் தகடு என்பவற்றை எடுத்துச் செல்வதில் உள்ள தடையை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் படவேண்டும் என வன்னிப் பிராந்திய ஆயுதப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரியவிடம் அந்த மாவட்டங்களைச்சேர்ந்த அரசாங்க அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார், வவுனியா நகரப் பிரதேசங்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில உள்ளபோதிலும் அப்பகுதிகளுக்கு பென்டோச் பற்றரிகள், அலுமினியத் தகடுகள் என்பவற்றை எடுத்துச் செல்ல முடியாதவாறு மதவாச்சி சோதனைச் சாவடியில் தடை விதிக்கப்பட்டிருப்பதனால் இப்பிரதேசங்களில் இவற்றைப் பொது மக்கள் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதாக வன்னிப் பிராந்திய இராணுவ தளபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கு இந்தக் தடை இல்லை என தெரிவித்த வன்னிப் பிராந்திய இராணுவத்தளபதி கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு அந்தப் பொருட்கள் கொண்டு செல்வதே தடை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தி உரிய அனுமதி வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசாங்க அதிபர்களுடனான சந்திப்பின்போது வன்னிப் பிராந்திய இராணுவ தளபதி உறுதியளித்துள்ளதாக வவுனியா அரசாங்க அதிபர் சண்முகம் தெரிவித்தார். (அ-6)

## இராசி பலன்

14.08.2008
(ஆடி 30. வியாழக்கிழமை)
பூராடம் முற்பகல் 11.29 மணிவரை
திரேயாதசி பின்னிரவு 1.44 மணிவரை
இராகுகாலம்-01.35-3.05 மணிவரை
சுபநேரம்-7.35-9.05 மணிவரை
பிரதோஷ விரதம்

| | |
|---|---|
| மேடம் | சரீரப்பிரயாசை, பிரயாணம், கட்டுப்பாடு, எதிர்பாராத செலவு. |
| இடபம் | வீண்பகை, காரியதடங்கல், ஆரோக்கியக்குறைவு, பொருள் விரயம். |
| மிதுனம் | களஸ்திர நன்மை, தேக நலன், முயற்சிகைக்கூடும், சத்துரு ஜெயம். |
| கடகம் | எடுத்த காரியம் கைகூடும், உற்சாகம், பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | கௌரவக்குறைவு, தொழில் மந்தநிலை, குடும்பக்கவலை, பணக்குறைவு. |
| கன்னி | தன்னம்பிக்கைக்குறைவு, உறவினர் சந்திப்பு, உடல்நலக் குறைவு, தொழிலில் ஆரம்பம். |
| துலாம் | கூட்டுமுயற்சி, இனியசம்பவம், உறவினர் வருகை, கீர்த்தி. |
| விருச்சிகம் | முயற்சிதாமதம், மனோசங்கடம், தனவிரயம், போசனசுகக்குறைவு. |
| தனுசு | நல்லமுயற்சி, தெய்வசிந்தை, சயனசுகம், தேகநலன். |
| மகரம் | சோம்பல் நிலை, புத்திரரால் கவலை, பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | தனதானிய சேர்க்கை, காரிய சித்தி, போசனசுகம், உடல்நலம். |
| மீனம் | தூரதேசச்செய்தி, நன்கொடை, ஆரோக்கியம், முயற்சிகைக்கூடும். |

வள்ளுவன்

# நிதிபோதாது என்று அபிவிருத்திகள் நிறுத்தப்படவில்லை - ஜனாதிபதி


(கொழும்பு)

நிதி போதாது என்று காரணம் கூறி எந்த ஒரு அபிவிருத்தி நடவடிக்கையும் நிறுத்தப்படவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஜப்பான், ஈரான், இந்தியா, சீனா எனச் சக்தி நாடுகளில் இருந்தும் கடன் உதவிகள் கிடைத்துக் கொண்டிருக்கும் நிலையில் இன்னும் வேறு எங்கிருந்து உதவிகள் கிடைக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி கேள்வி எழுப்பியுள்ளார். அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நில உரிமையை மக்களுக்கு வழங்க அரசாங்கம் செயற்பட்டு வரும் நிலையில் சிலர் கடந்த காலங்களில் முன்னைய அரசாங்கம் பயங்கரவாதிகளுக்கு ஒப்பந்தம் மூலம் நிலவுரிமையை வழங்கியதாகவும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக் காட்டினார்.


வடக்கு கிழக்குப் பயங்கரவாதிகளுக்குத் தாரை வார்க்கப்பட்டபோது கணக்கில்லெடுக்காமல் இருந்தவர்கள் இன்று கொழும்பில் குண்டுகள் வெடிக்காதபோது மாத்திரம் சந்தோஷப்பட்டுக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-5)



இலங்கை வங்கியின் 69ஆவது வருட நிறைவுக் கொண்டாட்டங்கள் வங்கியின் யாழ்.அதியுயர் மேற்தரக் கிளையில் நடைபெற்றபோது கிளையின் பிரதான முகாமையாளர் ஆர்.விஜயசிங்கம் உரையாற்றுவதையும், மேடையில் யாழ்.அதிபர் கே.கணேஷ், உதவிப் பொது முகாமையாளர் பீ.ஏ.அருமைநாயகம் மற்றும் வணபிதா மைக்கல் சவுந்தரநாயகம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# தமிழ்மக்களுக்கு உரிமைகளை வழங்கக்கூடிய அரசியல் ரீதியான தீர்வு காணப்படவேண்டும்

## அமெரிக்க உதவி இராஜாங்க செயலர் பௌச்சர்



(கொழும்பு)

தமிழ்மக்களுக்கு சகல உரிமைகளுடனும் கூடிய நிர்வாக அமைப்புமுறை வழங்கப்பட வேண்டும். இராணுவ ரீதியில் மட்டும் பிரச்சினைக்குதீர்வு கண்டுவிட முடியாது என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்க செயலர் ரிச்சர்ட் பௌச்சர் தெரிவித்துள்ளார்.

இலங்கை சார்க் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பும் முன்னர் ஜப்பான் சென்றிருந்த ரிச்சர்ட் பௌச்சர் அங்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் ஜப்பானிய பிரதிநிதி ஜசூசி அகாசியை சந்தித்து இலங்கை விவகாரம் குறித்து பேசினார். அதன் பின்னர் செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றை காண்பதற்கு வழி திறக்கப் படவேண்டும். இராணுவ ரீதியாக மட்டும் இந்த பிரச்சினைக்கு தீர்வு கண்டுவிட முடியாது.இந்த பிரச்சினை முடிபுறாத ஒன்று என்று நாம் நம்புகிறோம்.

அரசியல் வெளி ஒன்று திறக்கப்பட்டு அமைதி வழியில் தீர்வு காண்பதற்குரிய வழி வகைகள்மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால் தற்போதைக்கு அப்படியான முயற்சிக்கு அங்கு சாத்தியமில்லாத சூழ்நிலையே காணப்படுகிறது. அங்கு பாரிய சண்டை நடை பெறுகிறது. இந்த வருடம் இலங்கையின் நிலை மிகவும் பாரதூரமாக உள்ளது.

அமைதி முயற்சிகளை மேற்கொள்ளுமாறு அங்கு போய் கூறமுடியாத நிலை நிலவுகிறது.

அதற்காக எமது முயற்சிகளை நாம் கைவிட்டு விட்டோம் என்று அர்த்தமாகாது. இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத்தலைமைகள் என்ற வகையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள்; நோர்வே, ஜப்பான் ஆகியவற்றுடன் சேர்ந்து அமெரிக்காவும் இலங்கை விடயத்தில் அமைதி வழியிலான தீர்வு ஒன்றை ஏற்படுத்த தொடர்ந்து அழுத்தம் வழங்கும்.

(அ-6)

### இலங்கை வங்கி வழங்கும் பரிசில்கள்

இலங்கை வங்கியானது வழமைபோல் இவ்வருடமும்தரம்5புலமைப்பரிசில்பரீட்சையில்சித்தி பெறும் மாணவர்களில் தேசிய ரீதியில் 1000 பேருக்கும்,மாவட்ட ரீதியில் 250பேருக்குமாக மொத்தம் 1250 பேருக்கு ரூபா 10000 பெறுமதியான புலமைப்பரிசில்களை வழங்கவுள்ளது.

எனவே இலங்கை வங்கியில் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக மிகக் குறைந்த வைப்பாக ரூபா 2500ஐ சிறுவர் பொன் அரும்புக் கணக்கில் வைப்புச் செய்வதன் மூலம் உங்கள் பிள்ளைகளின் உயர் கல்விக்கான அடித்தளத்தை இன்றே உருவாக்கலாம்.

மற்றும் 18+, 14+ பொன் அரும்பு சேமிப்புக் கணக்குகளில் குறைந்தது ரூபா 5000, ரூபா 2500 வீதம் வைப்புச் செய்து கிரிக்கெற்வீரர் அஜந்த மெண்டிஸின் உருவம் பொறிக்கப்பட்ட ரீ-சேட், அழகிய தொப்பி என்பவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் பொன் அரும்புக்கணக்கில் பணத்தை வைப்புச்செய்து DSI பாதணிகளிற்கான 7.5% கழிவுச் சிட்டைகளையும் பெற்றுக் கொள்ளலாம். அருகில் உள்ள இலங்கை வங்கியுடன் தொடர்புகொண்டு உங்கள் பரிசில்களை வெல்லுங்கள்.

(அ)

# விடுதலைக்கான போரில் இழப்புக்கள் ஏற்படத்தான் செய்யும் அதனையும் தாண்டி இலட்சியத்தை அடைவோம்

## வடபோர்முனை கட்டளைத்தளபதி கேணல் தீபன் உரை

இலட்சியத்தை நோக்கிய எமது விடுதலைப் போரில் இழப்புக்கள் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கும். ஆனால், விடுதலைக்காக நாம் தொடர்ந்து போராடுவோம். இவ்வாறான பல துன்பங்களைத்தாண்டித்தான் விடுதலையை வென்றெடுக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் வடபோர் முனை கட்டளைத் தளபதி கேணல் தீபன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற லெப்டினனட் கேணல் விக்கீஸ்வரனின் வீரவணக்க நிகழ்வில் வீரவணக்க உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தனது உரையில் மேலும் கூறியதாவது, இராணுவம் தமிழ்மக்கள் மீது உளவியல் போர் ஒன்றை நடத்திக்கொண்டிருக்கின்றது.

மக்கள் வாழ்விடங்களில் வான் தாக்குதல் நடத்தியும் எறிகணைத்தாக்குதல் நடத்தியும் உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்துகின்ற முயற்சியில் இலங்கை ஈடுபட்டுள்ளது. இதற்கு தமிழ்மக்கள் இடமளிக்ககூடாது. எதிரியின் தாக்குதலில் இருந்து தம்மை பாதுகாத்து கொள்வதற்கு பதுங்குகுழிகளை அமைத்தும் அரண்களை அமைத்தும் பாதுகாப்பினை தேட வேண்டும்.

விடுதலைப்போரில் இழப்புக்கள் ஏற்படத்தான் செய்யும். ஆனால், நாம் தொடர்ந்து போராடிவருகிறோம். எதிரி தமிழ்மக்களுக்கு பாரிய அழிவுகளை உயிரிழப்புக்களை - ஏற்படுத்தி தமிழ்மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கி வருகின்றனர்.

விடுதலைக்கான போரில் இவ்வாறான துன்பங்களை தாண்டித்தான் வெற்றிகளை பெறமுடியும். விடுதலைக்கான அர்ப்பணிப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்த அர்ப்பணிப்புக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது,படைகள் நினைப்பதை செய்து முடிக்க முடியாது. எதிரிக்கு அவலத்தை கொடுத்து எமது வாழ்வை மாற்ற வேண்டும். இது தான் நாம் மாவீரர்களுக்கு செய்கின்ற பணியாக இருக்கும். இப்பணியை நிறைவேற்றி முடிப்பது தமிழ்மக்கள் அனைவரதும் கடமையாக இருக்கும். இதன்மூலம் விடுதலையை வென்றெடுக்க முடியும் என்றார்.

(அ-6)

# கொழும்புத் துறைமுகத்துக்கு மாற்றீடாக துறைமுகம் அமைக்கத் திட்டம்

## இந்திய கப்பல்துறை தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து வரும் சரக்குக் கப்பல்களின், கப்பலிலிருந்து கப்பலுக்கு சரக்குகளை மாற்றும் செயற்பாட்டில் 70 வீதமானவை கொழும்புத் துறைமுகத்திலேயே நடைபெறுவதன் காரணமாக, தென்னிந்திய துறைமுகங்கள் இந்த சந்தையைக் கைப்பற்றுவதற்கு திட்டமிட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதன் பொருட்டு தென்னிந்தியாவிலுள்ள மேற்கு மற்றும் கிழக்கு கடற்கரையில் சுமார் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலிடுவதன் மூலம் அப்பிரதேசத்தை முக்கிய கடற்போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளதாகவும், இதன் மூலம் மிகக் குறுகிய காலத்தில் இலங்கையுடன் போட்டியிடக் கூடியதாகவிருக்கும் எனவும் இந்திய கப்பல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, தமிழ்நாட்டிலுள்ள, சென்னை, ஈனோர், தூத்துக்குடியிருப்பு, கொலாச்சல் ஆகிய துறைமுகங்களில் மேலும் பலவசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கப்பல் சரக்குகள் பரிமாற்றம் நடைபெறும் கொழும்புசந்தையைக் கைப்பற்றுவதற்கு இதுவே சிறந்த சந்தர்ப்பம் எனத் தாம் கருதுவதாகவும் இந்திய கப்பல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் கப்பல் சரக்குப் பரிமாற்றத் திற்கேற்ற துறைமுக வசதி இல்லாததன் காரணமாக, இந்திய கப்பல் உரிமையாளர்கள் மேலதிகமாக 150டொலர்களை கொழும்புத் துறைமுகத்துக்குச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுகத்துக்கு மாற்றீடாக இந்திய துறைமுகம் ஒன்றை அபிவிருத்தி செய்வது குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனவும் இந்திய கப்பல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பூகோள ரீதியில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் மிக முக்கியமான துறைமுகமாக கொழும்புத் துறைமுகம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

### ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான சாரணியப் பயிற்சி

16ஆம் திகதி சனிக்கிழமை அன்று யாழ்ப்பாண கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் பயிற்சிப் பட்டறை நடைபெறவுள்ளது.

மாவட்ட சாரணிய ஆணையாளர், சாரணிய வல்லுநர்கள் வளவாளராக கடமையாற்றுவர்.

யாழ்ப்பாணக் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களில் குருளைச் சாரணர், சிறுதோழியர் ஆகிய அமைப்புக்களின் பொறுப்பாசிரியர் ஒருவர் வீதம் பாடசாலைக்கு இருவரை தவறாது பங்குபற்றுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக்கொண்டுள்ளார்.

(அ)

## மூன்று முஸ்லிம்கள் வெள்ளை வானில் கடத்தல்

(மட்டக்களப்பு)

அம்பாறையிலும் மட்டக்களப்பிலும் 03 முஸ்லிம் வர்த்தகர்கள் வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் கிராமத்தைச் சேர்ந்த இப்றா லெவ்வை லத்தீப் என்பவர் நேற்று முன்தினம் மாலை வீட்டுக்கு வந்த சிலரால் வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளதாகச் சம்மாந்துறைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது.

அத்துடன் காரைதீவு மாளிகைக்காடு கிராமத்தைச் சேர்ந்த முகம்மது றைஸ் என்பவர் நேற்று முன்தினம் வெள்ளைவானில் கடத்தப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு ஏறாவூர்க் கிராமத்தைச் சேர்ந்த ஒருவரும் வெள்ளை வானில் கடத்தப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

(ச-5)

# பொறிவெடியில் சிக்கி மூன்று படையினர் காயம்

(மட்டக்களப்பு)

கஞ்சிகுடிச்சாறு வேப்பேரிக்குள காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளின் பொறி வெடியில் சிக்கி விசேட அதிரடிப்படையினர் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளைத் தேடி அழிக்கும் நோக்குடன் விசேட அதிரடிப்படையினர் நேற்று முன்தினம் மாலை வேப்பேரிக்குளம் பகுதியில் மேற்கொண்ட நடவடிக்கையின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(ச-5)

# நோத்முதல் கோபல்லவா வரை 67



## இலங்கையர் சங்கம் செய்த கிளர்ச்சி

முன்னர் 1848 இல் ஒரே ஒரு உத்தியோகப்பற்றற்ற பிரதிநிதி செய்த விண்ணப்பத்தின் விளைவாகச் சட்டசபையிலே பரிபாலனச் செலவு அனுமதிக்கப்படல் வேண்டும் என்ற வழக்கத்தைக் கிறேபிரபு வழங்கினார். ஆனால் இன்றோ சட்டசபையின் பிரதிநிதிகள் என்னும் கௌரவத்துக்குரிய அனைவரும் ஏகமன தாக விண்ணப்பித்தும், நாட்டின் பொதுமக் கள் சார்பாக நினைவேடுகள் அனுப்பியும் அவற்றை எல்லாம் மதிக்காத மந்திரியாரீன் மதிநுட்பத்தை என்னென்பது என்றனர்.

முந்திய மந்திரியாரும் இந்த மந்திரியாரும் சட்டசபையின் உரிமைகளை மதித்தார்கள் என்பது உண்மையேயாயினும், முந்தியவர் அதன் உரிமையைப் புறக்கணிக் காது நடந்தார். ஆனால் இவர் அதனை வெகுவாகப் புறக்கணித்துவிட்டார்.

இங்ஙனம் அனுமானித்த உத்தியோகப் பற்றற்றவர் மேலும் தமக்கு ஏற்பட்ட குறையை எண்ணி 'நாங்கள் செய்ய வேண்டியவை யாவற்றையும்- தவறாமல் செய்து விட்டோம்.

நாங்கள் எங்களுக்குரிய உரிமை யை நீதியை வழங்குமாறு தானே விண்ணப்பித்தோம். அதுவும் அவர்கள் எங்களுக்கு முன்னர் வழங்குவதாக வாக்குப் பண்ணிய ஒன்றுதானே! நாங்கள் மகாராணியாரின் மதிப்புக்குரிய மந்திரிகளுக்கு எடுத்துக் காட்டியவை. எங்கள் தாய்நாட்டுக்குச் செய்த மனுக்கள், மகாராணியாருக்குச் சமர்ப்பித்த விளிப்புரைகள் என்றின்ன இவையாவும் வீணாகிப் போயினவே. நாங்கள் ஏமாற்றப் பட்டதோடு மாத்திரம் இருக்கவில்லை. அநீதி இழைக்கப்பட்டும் இருக்கிறோம்.

### மீள் பார்வை

இப்பொழுது நமக்குள்ள பிரச்சினை நாம் எமது உரிமையைப் பாதுகாப்பதே, அது சாத்தியமின்றேல் நாம் உரிமையற்றவர் என்பதே கருத்தாகும். நாம் இதனைப் பொறுத்திருந்தால் இவர்கள் எங்களை உரிமைக்கு யோக்கியம் இல்லாதவர் எனக் கருதுவது உண்மையாகிவிடும். ஆகவே நாம் ஒவ்வொருவரும் எமது மூச்சுள்ள வரை ஒன்றுபட்டு எம்முழு ஆற்றலையும் இதில் ஈடுபடுத்தி எமக்கு முறையான ஒரு சட்ட சபை அமைக்கும் வரை முன்னின்று கிளர்ச்சி செய்வோமாக. நாங்கள் இந்தச் சங்கத்துக்கு எங்களை அர்ப்பணித்து இதற்காக உறுதியுடன் பணி புரிவோமாக' எனத் திடசங்கர்ப்பம செய்வாராயினர்.


இந்த வேளையிலேதான் சேர் ஹேர் குலிஸ் றொபின்சன் அவர்கள் ஆள்பதி யாக நியமனம் பெற்றுவந்தார்.

திருவாளர் லோறன்ஸ் அவர்களுடைய செயற்றிறனாலாய அரசியல் நினைவேட்டில் *உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகள் தொகை அதிகரித்தல் வேண்டும். வரவு செலவுத் திட்டத்தைச் சட்டசபையே தயாரித்தல் வேண்டும்* என்பனவாதிய திருத்தங்கள் குறிப்பிடப்பட்டன. யோச்வால் இங்கிலாந்துக்குச் சென்று மந்திரிமார்களைக் கண்டு இலங்கையர் சார்பில் திருத்தங் கேட்டார். அவருடைய நினைவேடு உடனடியாகப் பலன் செய்யவில்லையாயினும் அது பேரரசுவாதிகளைச் சிந்திக்க வைத்தது. குடியேற்ற மந்திரியார் இலங்கையர் சமர்ப்பித்த நினைவேடுகளை முன்னர் காற்றிலே பறக்கவிட்டமை போல மேலும் செய்ய இயலாதவரானார்.

லண்டனில் இருந்த வங்கிக்காரரும், பெரிய வர்த்தகரும் இலங்கையில் தோட்டப் பகுதிகள் அபிவிருத்தியடைவதையே பெரிதும் விரும்பினார்கள். ஆகவே அவர்கள் உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதிகளின் கோரிக்கைகளை மனப்பூர்வமாக ஆதரித்தனர். நல்ல வேளையாக அந்த ஆண்டுகளில் தோட்டப் பகுதியில் நல்ல வருமானம் உண்டாகியது. அதனால் செல்வமதிகரிக்கவே பட்டாளத்துச் செலவையும் புகைவண்டிப்பாதை அமைக்கும் செலவை யும் சரிசெய்யக் கூடியதாக நிலைமை ஏற்பட்டது.

எனவே இலங்கையர் கோரியவையும் அவர்கள் செய்த கிளர்ச்சிகளும் ஓரளவுக்கு ஓய்ந்தன என்றாலும் அக்கிளர்ச்சியின் பயனாகவே *கொழும்பு, கண்டி, காலி* ஆகிய நகரங்களுக்கு மாநகர சபைகள் 1865 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. இது உள்ளூர் ஆட்சியில் ஒரு பெரிய முன்னேற்றம் எனப் பலருங் கருதினர். இது இவ்வாறாக முன்னர் நியமிக்கப்பட்ட ஆணையாளர் சபையினர் இலங்கைப் படைகளின் செலவை 16000 ஆக மதிப்பிட்டு, அச் செலவு போக எஞ்சிய வரு மானத்தைச் சட்டசபையினர் தமது தீர்மானத்தின் வண்ணம் நாட்டின் அபிவிருத்தியின் பொருட்டுச் செலவு செய்யலாம் என அறிக்கை விடுத்தனர். அத்தோடு இலங்கைச் சட்டசபை அங்கத்தவர் வரவு செலவுத் திட்டத்தைப் பார்வையிடலாம் எனக் குடியேற்ற மந்திரியார் அனுமதியும் வழங்கினர். அக்கால நிலைமையில் இத்த கைய சலுகைகள் பெரியவரமாகவே இருந்தது. ஆள்பதி றொபின்சனுக்கும் அவருக்கு அந்தரங்க ஆலோசனை கூறிவந்த றிச்சாட் மோகன் என்ற இராணி அப்புக்காத்தாருக்கும் நாட்டில் கெட்ட பெயர் உண்டாயிற்று. (தொடரும்)


**க.சி.குலரத்தினம்**



கவிஞர் துரையரின் "எங்களுக்காக" நூல் வெளியீட்டு விழாவில் சிற்பி சிவசரவணபவன் தலைமையுரை நிகழ்த்துவதையும், வலம்புரி பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆய்வுரை நிகழ்த்துவதையும், வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரியர் பரம். புஸ்பரத்தினம் முதல் பிரதியை பூபாலசிங்கம் புத்தகசாலை முகாமையாளர் வீ.மகாலிங்கத்திற்கு வழங்குவதையும், நடுவில் நூலாசிரியர் நிற்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# கோப்பாய்ப் பிரதேசத்தின் இன்றைய கல்விநிலை

3



கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

| பாடசாலையின் பெயர் | 2003 தோற்றியோர் எண்ணிக்கை | 2003 சித்தி எண்ணிக்கை | 2003 சித்தி% | 2004 தோற்றியோர் எண்ணிக்கை | 2004 சித்தி எண். | 2004 சித்தி% | 2005 தோற்றியோர் எண்ணிக்கை | 2005 சித்தி எண்ணிக்கை | 2005 சித்தி% | 2006 தோற்றியோர் எண்ணிக்கை | 2006 சித்தி எண்ணிக்கை | 2006 சித்தி% | 2007 தோற்றியோர் எண்ணிக்கை | 2007 சித்தி எண்ணிக்கை | 2007 சித்தி% |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அச்சுவேலி மகா வித்தி. | 60 | 2 | 3.33 | 66 | 3 | 4.55 | 62 | 2 | 3.23 | 51 | 6 | 11.76 | 39 | 8 | 20.51 |
| அத்தியார் இந்துக் கல்லூரி. | 24 | 1 | 4.17 | 25 | 0 | 0.00 | 35 | 5 | 14.29 | 18 | 0 | 0.00 | 25 | 1 | 4.00 |
| இடைக்காடு மகா வித்தி. | 28 | 2 | 7.14 | 25 | 2 | 8.00 | 26 | 2 | 7.69 | 22 | 2 | 9.09 | 17 | 3 | 17.65 |
| கோப்பாய் மகா வித்தி. | 16 | 1 | 6.25 | 18 | 2 | 11.11 | 19 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 | 14 | 0 | 0.00 |
| ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி | 75 | 3 | 4.00 | 87 | 0 | 0.00 | 98 | 6 | 6.12 | 74 | 5 | 6.76 | 75 | 6 | 8.00 |
| அச்செழு சைவப்பிரகாச வித்தி. | 31 | 0 | 0.00 | 22 | 0 | 0.00 | 33 | 0 | 0.00 | 24 | 0 | 0.00 | 25 | 0 | 0.00 |
| அச்சுவேலி சரஸ்வதி வித்தி. | 10 | 1 | 10.00 | 7 | 0 | 0.00 | 17 | 1 | 5.88 | 10 | 0 | 0.00 | 8 | 1 | 12.50 |
| சென்.திரேஸா பெண்கள் வித்தி. | 32 | 4 | 12.50 | 47 | 1 | 2.13 | 52 | 3 | 5.77 | 52 | 6 | 11.54 | 55 | 7 | 12.73 |
| ஆவரங்கால் மகாஜனா வித்தி. | 13 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 | 16 | 0 | 0.00 | 10 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 |
| ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி. | 38 | 5 | 13.16 | 47 | 3 | 6.38 | 44 | 4 | 9.09 | 42 | 3 | 7.14 | 42 | 3 | 7.14 |
| கோப்பாய் சரவணபவானந்த வித்தி. | 28 | 2 | 7.14 | 21 | 1 | 4.76 | 18 | 0 | 0.00 | 12 | 0 | 0.00 | 16 | 1 | 6.25 |
| புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தி. | 19 | 0 | 0.00 | 14 | 0 | 0.00 | 33 | .0 | 0.00 | 11 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 |
| ஊரெழு கணேசா வித்தி. | 30 | 0 | 0.00 | 33 | 0 | 0.00 | 46 | 0 | 0.00 | 22 | 0 | 0.00 | 27 | 0 | 0.00 |
| உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி. | 68 | 6 | 8.82 | 71 | 10 | 14.08 | 70 | 7 | 10.00 | 48 | 7 | 14.58 | 86 | 14 | 16.28 |
| வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி. | 09 | 0 | 0.00 | 18 | 0 | 0.00 | 20 | 0 | 0.00 | 10 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 |
| அச்செழு மெ.மி.த.க.பாடசாலை | 01 | 0 | 0.00 | 2 | 0 | 0.00 | 3 | 0 | 0.00 | 2 | 0 | 0.00 | 3 | 0 | 0.00 |
| இருபாலை சி.சி.த.க.பாடசாலை | 15 | 2 | 13.33 | 18 | 0 | 0.00 | 12 | 1 | 8.33 | 9 | 2 | 22.22 | 8 | 1 | 12.50 |
| கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தி. | 05 | 0 | 0.00 | 3 | 0 | 0.00 | 11 | 1 | 9.09 | 12 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 |
| கோப்பாய் நாவலர் வித்தி. | 74 | 8 | 10.81 | 78 | 11 | 14.10 | 80 | 10 | 12.50 | | 10 | 14.29 | 65 | 17 | 26.15 |
| கோப்பாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை | 10 | 0 | 0.00 | 13 | 0 | 0.00 | 13 | 0 | 0.00 | | 0 | 0.00 | 12 | 0 | 0.00 |
| கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை | 10 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 11 | 0 | 0.00 | | 0 | 0.00 | 7 | 0 | 0.00 |
| கோப்பாய் தெற்கு ஸ்கந்தவேள் வித்தி. | 20 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 15 | 0 | 0.00 | | 0 | 0.00 | 15 | 0 | 0.00 |
| நவக்கிரி அ.மி.த.க.பாடசாலை | 23 | 0 | 0.00 | 17 | 0 | 0.00 | 19 | 0 | 0.00 | | 0 | 0.00 | 15 | 0 | 0.00 |
| நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை | 16 | 1 | 6.25 | 15 | 0 | 0.00 | 9 | 2 | 22.22 | | 1 | 9.09 | 10 | 0 | 0.00 |
| நீர்வேலி றோ.க.த.க.பாடசாலை | 18 | 0 | 0.00 | 26 | 1 | 3.85 | 19 | 1 | 5.26 | | 1 | 6.25 | 12 | 1 | 8.33 |
| நீர்வேலி தெற்கு இ.த.க.பாடசாலை | 12 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 8 | 0 | 0.00 | | 0 | 0.00 | 8 | 1 | 12.50 |
| பத்தமேனி இரட்ணேஸ்வரி வித்தி. | 10 | 0 | 0.00 | 7 | 0 | 0.00 | 18 | 0 | 0.00 | | 0 | 0.00 | 11 | 0 | 0.00 |
| புத்தூர் மெ.மி.த.க.பாடசாலை | 20 | 0 | 0.00 | 33 | 0 | 0.00 | 5 | 0 | 0.00 | | 0 | 0.00 | 11 | 0 | 0.00 |
| சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலை | 09 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 | 8 | 0 | 0.00 | 10 | 1 | 10.00 | 14 | 0 | 0.00 |
| சிறுப்பிட்டி இ. த.க.பாடசாலை | 17 | 0 | 0.00 | 19 | 0 | 0.00 | 34 | 3 | 8.82 | 16 | 0 | 0.00 | 26 | 5 | 19.23 |
| தோப்பு அருள்நந்தி வித்தி. | 10 | 0 | 0.00 | 14 | 0 | 0.00 | 10 | 0 | 0.00 | 9 | 0 | 0.00 | 13 | 0 | 0.00 |
| ஊரெழு சி.சி.த.க.பாடசாலை | 02 | 0 | 0.00 | | | | | | | | | | | | |
| உரும்பிராய் சந்திரோதயா வித்தி. | 27 | 1 | 3.70 | 24 | 0 | 0.00 | 41 | 2 | 4.88 | 23 | 0 | 0.00 | 19 | 1 | 5.26 |
| உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை | 25 | 2 | 8.00 | 32 | 0 | 0.00 | 32 | 0 | 0.00 | 31 | 0 | 0.00 | 28 | 2 | 7.14 |
| புத்தூர் ஸ்ரீ பஞ்சிகா வித்தி. | 09 | 0 | 0.00 | 5 | 0 | 0.00 | 3 | 0 | 0.00 | 5 | 0 | 0.00 | 8 | 0 | 0.00 |
| கரந்தீன் இராமுப்பிள்ளை வித்தி. | 40 | 5 | 12.50 | 34 | 6 | 17.65 | 29 | 3 | 10.34 | 29 | 7 | 24.14 | 41 | 10 | 24.39 |
| மொத்தம்-கோப்பாய் கோட்டம் | 854 | 46 | 5.39 | 880 | 40 | 4.55 | 969 | 53 | 547 | 754 | 51 | 6.76 | 789 | 82 | 10.39 |
| யாழ்.மாவட்டம் | 8623 | 951 | 11.03 | 8933 | 890 | 9.96 | 9837 | 857 | 8.71 | 8060 | 885 | 10.98 | | | |

இவ்விடத்தில் பெற்றோருக்கான அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களும், பெற்றோர்-பாடசாலை பங்காண்மை (Partnership) ஏற்டும் மாணவர்களின் வீட்டுப் பயிற்சிகளில் பெற்றோரை அக்கறை கொள்ளச் செய்தலும் என பல்வேறு உபாயங்களை திட்டமிட்டு நடைமுறைப் படுத்திப் பார்க்க வேண்டியது பாடசாலைகளின் பொறுப்பாகும்.

### க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை

இலங்கையின் கல்வி அமைப்பில், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

பாடசாலைத் தொடர் கல்வியைத் தீர்மானிப்பதாகவும் பாடசாலையிலிருந்தான இடைவிலகலைத் தீர்மானிப்பதாகவும் இப் பரீட்சை உள்ளது. கோப்பாய் கல்விக் கோட்டத்தின் 17 பாடசாலைகளிலிருந்து இப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுகின்றனர். கடந்த 5 வருடங்களில், இப் பாடசாலைகளிலிருந்து க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றிய மாண வர்களின் பெறுபேறுகளை அட்டவணை தருகின்றது.


பரீட்சைக்குத் தோற்றியோர் எண்ணிக்கை, க.பொ.த.உயர்தரத்திற்குத் தகுதி பெற்றோர் எண்ணிக்கை, தகுதிபெற்றோர் சதவீதம் என்பவற்றை உள்ளடக்கியதாக அட்டவணை உள்ளது. (தொடரும்)

**கலாநிதி த.கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# ஜனாதிபதி முஷாரப் பதவி விலகாவிட்டால் நாட்டைவிட்டு வெளியேற முடியாது

## பாகிஸ்தான் அரசு அறிவிப்பு

ஜனாதிபதி பதவியிலிருந்து தானாகவே விலகாவிட்டால் பர்வேஷ் முஷாரப் நாட்டை விட்டு சுதந்திரமாக வெளியேற முடியாதென



பாகிஸ்தான் அரசாங்கம் தெரிவித்துள்ளது. நாடாளுமன்றத்தில் முஷாரப் மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் அவர் பதவி நீக்கம் செய்யப்படுவதோடு, குற்றங்களுக்காக கைது செய்யப்படக்கூடு மெனவும் தெரிவிக்கப் படுகிறது.

இதனைத் தடுக்கும் வகையில் அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளின் தூதர்கள் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் பர்வேஷ் முஷாரப் மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அவரை கைது செய்யக் கூடாதென்பதுடன் அவர் சுதந்திரமாக நாட்டை விட்டு வெளியேறே அனுமதிக்க வேண்டு மெனவும் அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகளின் தூதர்கள் கூறி வருகின்றனர்.

இது தொடர்பாக ஆளும் பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர் ஆசிப் அலி சர்தாரியை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் தூதர்கள் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்த நிலையில் முஷாரப் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதில் தனது கூட்டணிக் கட்சியின் தலைவரான நவாஸ் ஷெரீப் தீவிரமாக உள்ளாரெனவும், இதனால் முஷாரப் சுலபமாக தப்பித்துக்கொள்ள முடியாதெனவும், முஷாரப்பை காப்பாற்ற தான் முயன்றால் ஆட்சியைக் கவிழ்ப்பதற்குகூட நவாஸ் ஷெரீப் தயங்கமாட்டாரெனவும் ஆசிப் அலி சர்தாரி தூதர்களிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கண்டனத் தீர்மானம் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் தானாகவே பதவி விலகினால், அவர் விரும்பும் நாட்டுக்கு செல்ல முடியுமெனவும் அவ்வாறு இல்லாவிடின் அவர் நாட்டைவிட்டு வெளியேறத் தடை விதிக்கப்படுமெனவும் சர்தாரி கூறியுள்ளார்.

இதற்கிடையில் முஷாரப்பை காப்பாற்றும் வேலைகளில் ஈடுபடுவதை அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் நிறுத்திக்கொள்ள வேண்டுமென சர்தாரி மூலமாக நவாஸ் ஷெரீப் அறிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க முஷாரப்புக்கு துணை நிற்பதற்கு இராணுவம் மறுத்து விட்டதாக தெரியவருகிறது.

இந்த விடயத்தில் இராணுவம் நடுநிலை வகிக்குமெனவும் முஷாரப் பதவி விலகுவதே நல்லதெனவும் அவரிடம் இராணுவத் தலைமை தெரிவித்துள்ளது. (அ)

## நேபாளத்தில் நாளை பிரதமர் தேர்தல்

(காத்மண்ட்)

நேபாளத்தின் பிரதமர் பதவிக்கான தேர்தல் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. பாராளுமன்ற ஆலோசகர் சபையொன்றின் கூட்டத்திலேயே இத் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது.

அதேசமயம் பிரதமர் பதவிக்கான வேட்பாளர்களை பதிவு செய்யும் நடவடிக்கை இன்று இடம்பெறவுள்ளது. 10நாள் காலக் கெடுவுக்குள் பிரதமர் தேர்தலை நடத்தி அரசாங்கத்தை ஸ்தாப்பிக் கும்படி பாராளுமன்ற செயலகத்துக்கு ஜனாதிபதி ராம் பரன்யாதவ் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவுறுத்தியிருந்தார்.

தேர்தலுக்கான செயற்கிரமங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் அதேவேளை கட்சி களிடையே ஐக்கிய அரசாங்க மொன்றை அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக கூறப்படுகிறது. (அ-6)

# பாக்.விமானப்படையினரின் பஸ்மீது குண்டுத் தாக்குதல், 13 பேர் பலி

வடமேற்கு பாகிஸ்தானில் உள்ள பெஷாவர் நகரில் விமானப் படையினர் பய ணித்த பஸ் ஒன்றை இலக்கு வைத்து செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட குண் டுத்தாக்குதலில் 13 பேர் பலியாகியுள்ளதுடன் 10பேருக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி தாக்குதலுக்கு எவரும் உரிமை கோரவில்லை என்றபோதும் ஆப்கானில் எல்லைப்பகுதியில் செயற்படும் போராளிகளே காரணமென குற்றஞ்சாட்டப்படுகிறது.

பெஷாவரில் போராளிகள் பலம் பெற்றுத் திகழும் பஜாயுர் பிராந்தியத்தில் கடந்த சில தினங்களாக பாதுகாப்புப் படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே உக்கிரமோதல் இடம்பெற்று வருகின்றநிலையிலேயே இத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. இந்த மோதல்களில் சிரேஷ்ட அல்கொய்தா கட்டளைத் தளபதி அபு சயீத் அல்மாஸ்ரி உட்பட 150 போராளிகள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது.

மேலும் ஞாயிற்றுக்கிழமை இரவில் இருந்து மட்டும் 50 போராளிகள் கொல்லப் பட்டுள்ளதாக பாகிஸ்தான் இராணுவம் அறிக்கையிட்டுள்ளது. அதேசமயம் இத்தாக் குதலில் 7 பொது மக்களும் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது. இந்நிலையில் மேற்படி விமானப்படை பஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பஸ் முழுமையாக சேதமடைந்துள்ளது. (அ-6)

# காந்தி வேடத்தில் பிச்சை எடுத்தவர் தர்மபுரியில் கைது

இந்தியாவில் நாளை சுதந்திரதினக் கொண்டாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ள நிலையில் தர்மபுரியில் காந்தி வேடமிட்டு பிச்சை எடுத்தவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



மக்கள் நடமாட்டம் மிகுந்த தர்மபுரி சின்னசாமி நாயுடு வீதியில் காந்தி வேடம் அணிந்து பிச்சை எடுத்துக்கொண்டிருந்த மதுரையைச் சேர்ந்த திவாகர் (வயது 40) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் போது இவர் பலூன் கடை நடத்தி வந்ததாகவும் அதில் நஷ்டம் ஏற்பட்டதால் காந்தி போன்று வேடம் அணிந்து ஊர் ஊராக சென்று பிச்சை எடுத்து வந்தது தெரிய வந்துள்ளது.

இவர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (அ-5)

# எட்டை மணந்தது ஐம்பது; மகளை மீட்டுத் தருமாறு தாய் வழக்கு

(துபாய்)

சவுதியில் எட்டு வயது சிறுமியை 50 வயது முதியவர் திருமணம் செய்ததை ரத்து செய்ய கோரி, சிறுமியின் தாய் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இது குறித்து அரபு நியூஸ் பத்திரிகை வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது, என் எட்டு வயது மகளை, அவளுடைய தந்தை 50வயது முதியவருக்கு மணம் முடித்து வைத்துள்ளார். என் மகளுக்குச் சிறிதும் பொருத்தமில்லாத இந்த மண வாழ்க்கையால், அவளது குழந்தைப்பருவம் கடுமையாக பாதிக்கப்படும்.

எனவே இந்த திருமண உறவை ரத்து செய்து, என் மகளை மீட்டுத் தர வேண்டும் என்று, கணவனைப் பிரிந்து வாழும் ஒரு பெண், மனித உரிமை ஆணையத்திடம் முறையிட்டுள்ளார். (அ-6)

## உலக தரிசனம்

# தாய்லாந்தின் முன்னாள் பிரதமருக்கு உச்ச நீதிமன்றம் பிடியாணை

தாய்லாந்தில் ஊழல் குற்றங்கள் சாட்டப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் த க்ஷின் ஷினா வத்ரவும் அவரது மனைவியும் திங்களன்று பாங்கொக் நீதிமன்றத்தில் ஆஜராகத் தவறியதால், அவர்களைக் கைதுசெய்வதற்கான பிடி ஆணையை தாய்லாந்து உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.



சீனாவின் பீஜிங் ஒலிம்பிக் விழாவில் கலந்துகொள்ள விரும்பிய ஷினாவத்ர தம்பதிகளுக்கு கடந்த வாரம் சிறப்பு அனுமதி வழங்கிய நீதிமன்றம் திங்களன்று அவர் பாங்கொக் நீதிமன்றத்துக்கு வரவேண்டும் என்று கேட்டிருந்தது.

தற்போது பிரிட்டனில் தங்கியுள்ள ஷினா வத்ர வெளியிட்டுள்ள அறிக்கை ஒன் றில் நீதிமன்றம் தங்களை நியாயமாக நடத்த வில்லை என்று கூறியிருக்கிறார். (அ)

# ஜோர்தான் மன்னர் அப்துல்லா முதல் தடவையாக ஈராக் விஜயம்

(ஜோர்தான்)

ஜோர்தான் மன்னர் அப்துல்லா, ஈராக்கிற்கு விஜயம் செய்துள்ளார். இதன் மூலம், 2003 ஆம் ஆண்டு அமெரிக்கப் படையினர் ஈராக்கில் நிலைகொண்டதன் பிற்பாடு, அந்த நாட்டிற்கு விஜயம் செய்யும் முதலாவது அரபு நாட்டுத் தலைவர் என்ற பெருமையை அப்துல்லா பெறுகிறார்.

இந்நிலையில் அவர் ஈராக் பிரதமர் நூரி மலிகி மற்றும் உப ஜனாதிபதி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

ஜோர்தான் மன்னரின் இவ்விஜயமானது இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகள் தொடர்பில் புதிய அத்தியாயம் ஒன்றை ஆரம்பித்து வைத்துள்ளதாக குறிப்பிட்ட ஈராக் பிரதமர் நூரி மலிகி, இது ஈராக்கிய ஸ்திரத் தன்மைக்கும் பாதுகாப்புக்கும் உதவுவதாக உள்ளதெனக் குறிப்பிட்டார். (அ-6)

# 'விற்றமின் டி' குறைபாட்டால் இறப்பு ஏற்படும் அபாயம்

## அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை

"விற்றமின் டி" குறைபாடானது வயது வந்தவர்களில் இறப்பிற்கான அபாய நிலையை அதிகரிப்பதாக அமெரிக்க மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இருதய நோய்கள், மார்பு புற்றுநோய், நீரிழிவு, பற்றீரிய நோய் பாதிப்புகள் என்பவற்றிலிருந்த "விற்றமின் டி" பாதுகாப்பளிப்பதாக இந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பல்திமோரிலுள்ள ஜோன்ஸ் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவ கலாநிதி எறின் மிகோஸ் மற்றும் அவரது சகாக்களால் 13 ஆயிரத்து 331 பேரிடையே சராசரியாக 8.7 ஆண்டுகளுக்கு மேற்படி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் மரணமடைந்த ஆயிரத்து806 பேரில், பலரிடையே "விற்றமின் டி" குறைபாடு இருப்பது கண்டறியப்பட்டது.

விற்றமின் டி ஆனது குருதி அமுக்கத்தை தணிவிப்பதற்கும் நோயெதிர்ப்பு தன்மையை அதிகரிப்பதற்கும் உதவுகின்றமை குறித்து ஆதாரங்கள் தமக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

உடலில் சூரிய ஒளி படும்போது உருவாகும் இந்த விற்றமின் டியை சால்மன் போன்ற மீன் வகைகளை உண்பதன் மூலமும் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் விற்றமின் டி குறைபாடானது பெண்களில் நீண்ட நாள் வலிகளுக்கு காரணமாக அமைவதாக அண்மைய பிரித்தானிய ஆய்வொன்று கூறுகிறது. (அ-6)

# பிரித்தானியாவின் முதலாவது 'ஐவிஎப்' தொழில்நுட்ப குழந்தை

(லண்டன்)

பிரித்தானியாவில் முதன் முதலாக கரு



முட்டையைவேகமாக உறைய வைக்கும் 'ஐவிஎப்' தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி, பெண் ஒருவர் கருத்தரித்து குழந்தையொன்றைபெற்றெடுத்துள்ளார்.

கடந்த 7 வருடங்களாக குழந்தைப் பாக்கியமின்றி கவலையுற்றிருந்த ரெபாக்கா பூல்மர் (28 வயது) என்ற பெண்ணே, வேல்ஸ் பல்கலைக்கழக மருத்துவமனையில் மேற்படி குழந்தையை பிரசவித்துள்ளார்.

நைதரசனைப் பயன்படுத்தி வேகமாக கருமுட்டையை உறைய வைக்கும் இந்த தொழில் நுட்பமானது, கருமுட்டை உறைந்த நிலையிலிருந்து மீளும்போது சேதம் ஏற்படுவதற்கான அபாயத்தை தடுப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

பெண்கள் தமது இனவிருத்தியாற்றலை இழக்கும் காலத்தில் குழந்தைகளை பெற்றுக் கொள்வதற்கு வசதியாக, கருமுட்டைகளை வேகமாக உறைய வைக்கும் இத் தொழில் நுட்பத்தை பயன்படுத்தி கருமுட்டைகளை சேமித்து வைக்க முடியும் என மருத்துவர் லின்டன் மைல்ஸ் கூறினார். (அ-6)

# தமிழக மீனவர்களின் இன்னுயிரை காக்க மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்

## தி.மு.க.கூட்டணியில் இருந்து கம்யூனிஸ்ட்டுகள் பிரியக்கூடாது என கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

மீனவர்களின் இன்னுயிரைக் காக்க மத்திய அர்சை தொடர்ந்து



வலியுறுத்துவோம் தமிழக மக்களின் நலன் கருதியாவது தி.மு.க.வின் தலைமையிலான கொள்கைக் கூட்டணியில் இருந்து கம்யூனிஸ்ட்டுகள் பிரிந்து செல்லக் கூடாது என்று தமிழக முதல்வர் கருணாநிதி கோரிக்கை விடுத்துள்ளார்.

1957 முதல் 50 ஆண்டுகள் தமிழக சட்டப் பேரவையில் ஆற்றிய உரைகள் குறித்த நூல்களின் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு முதல்வர் மேலும் உரையாற்றுகையில், சேது சமுத்திரத்திட்டம் குறித்து சட்டப் பேரவையில் கடந்த 1971ஆம் ஆண்டிலேயே வலியுறுத்தினேன் எப்படியாவது சேது திட்டத்தை தி. மு.க. அரசு நிறைவேற்றும்தமிழக மீன வர்களின் இன்னுயிரைக்காக்க மத் திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்.கச்சதீவு குறித்து பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தி.மு. க. வலியுறுத்தி வருகிறது.

நாம் எவருக்கும் ஏமாற்றம் அளிக்காத வகையில் இணைந்து பணியாற்றுவோம். நான் எந்தக் காலத்தில் இருந்து கம்யூனிஸ்ட்டாக இருக்கின்றேன். என்பதை அனைவரும் அறிவார்கள். மக்களுக்கு ஏமாற்றத்தை அளிக்காத வகையில் நாம் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

பாபர் மசூதி பிரச்சினையால் பா. ஜ .க.வின் கொடூரத்தைப் புரிந்து கொண்டோம். இதன் பின் நாம் எடுத்த நிலை என்ன? அந்த நிலையில் நாம் நிலையாக நிற்கப்போகிறோமா இல்லையா? இது குறித்து நாம் முடிவு செய்யவேண்டும். நமது தோழமையை நாம் அரும்பாடு பட்டு வளர்த்தோம் .

இந்த தோழமை எனும் தியாக தீபத்தை இந்த தியா கச் சுடரை நாம் அணையாமல் ஒன்றுபட்டு காப்போம் என்றார்.

(அ-6)

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் பாடசாலைகளுக்கு விஞ்ஞான உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலை களுக்கான விஞ்ஞான ஆய்வுகூட உபகரண்ங்கள் மற்றும் இரசாயன பொருட்களை வழங்க சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு சுமார் நான்கு வருடகாலமாக மேற்படி பொருட்கள் வழங்கப்படாதிருந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்தவை நேரில் சந்தித்து கலந்துரையாடியதையடுத்து இப் பொருட்கள் யாழ் .எடுத்துவரப்படவுள்ளன. (அ)


### ஸ்ரீ அம்மா பகவான் சரணம்
### பெருஞ்சேர் ஸ்ரீ பத்மாவதி அம்மாவின் 54 ஆவது ஜென்மதின விழா




இடம்:- இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் மணிமண்டபம்
திகதி:- 15.08.2008 (வெள்ளிக்கிழமை)
நேரம்:- 9.00-12.00 வரை

அன்பை வளர்க்கும் அற்புத பெரு விழா விசேட அஷ்டலட்சுமி அனுக்கிரக கலசபூஜை, நாட்டில் சாந்தி சமாதானத்திற்கான விசேட பிரார்த்தனை உட்பட நோய் நிவாரண ஆசி வழங்கப்படும். இவ் விழாவில் பங்குகொள்ளும் பக்தர்கள் அனைவரும் வெற்றிலையும் குங்குமமும் கொண்டு வரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரீ கல்கி ஆன்மீக மையம்
யாழ் தலைமையகம், மணியர்பதி லேன், கொக்குவில் (மேற்கு) யாழ்ப்பாணம்-இலங்கை

தொ.பே.021 222 2935
(சி/1401)


### விரைவில் வெளிவருகிறது வடமராட்சி கிழக்கு பிரதேச மலர்

(யாழ்ப்பாணம்)

மருதங்கேணி வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான பிரதேச மலர் ஒன்று வெளியிடுவதற்காக நடவடிக்கைகள் கலாசார உத்தியோகத்தரினால் முன்னெடுக்கப் பட்டுவருகிறது. வெகுவிரைவில் இம்மலர் வெளியிடப்படும் என தெரிவிக்கப் படுகிறது. (அ-35)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஓரிதழ்த் தாமரை

Botanical Name - Hybanthus enneaspermus
Family - Violaceae

சிறிய செடி இனத்தைச் சேர்ந்தது. பூவின் அமைப்பானது தாமரைப்பூவின் ஓரிதழைப்போல் நிறத்திலும், உருவத்திலும் ஒத்திருப்பதால் இப்பெயர்பெற்றது போலும். செடி 3அங்குலத்திலிருந்து ஆறு ஆங்குலம்வரை வளரும்.

இலை வேலுருவானதாகவும், சிறியதாகவும் நல்லபச்சை நிறமுடையதாகவும் இருக்கும். ஒன்றுவிட்ட இலைஅமைப்பைக்கொண்டது. இலை விளிம்புகள் வாட்பல் போன்ற அல்லது தொடர் விளிம்புள்ள அமைப்புக்களாகக் காணப்படும். பூ வெளிறிய சிவப்பு நிற முடையது. மஞ்சள் கலந்த வெளிறிய சிறிய விதைகளைக் கொண்டது.


வளரியல்பும், பரம்பலும்

வறண்ட பிரதேசங்களிலும், நீர் நிலையை அடுத்துள்ள இடங்களிலும் காணப்படும். யாழ் மாவட்டத்தில் மழைகாலங்களில் பரம்பல் அதிகமாகக் காணப்பட்ட பொழுதிலும் அச்வேலி, நீர்வேலி, உரும்பிராய், வேலணை, சங்கானை, இளவாலை, சுதுமலை, கைதடி போன்ற பிரதேசங்களில் கூடுதலாக அவதானிக்கப்பட்டது.

விதைகள் அல்லது வேர்க்கன்றுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

மருத்துவப் பயன்கள்

1. தாது புஷ்டிக்கு - அதாவது உடல் பலம் பெற ஓரிதழ் தாமரையிலை ஒரு கைப்பிடியளவு நீரில் நன்கு சுத்தம் செய்து பின்பு வாயில் போட்டு மென்று தின்றுவிட்டு ஒரு டம்ளர் அளவு காய்ச்சிய பசுவின் பாலை உடனே குடித்துவிட வேண்டும். தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட வேண்டும்.



2. சிறுநீர் எரிச்சல், சிறுநீர் கழிப்பதில் கஷ்டம் போன்ற நிலைமைகளில் கைப்பிடியளவு இலைகளை அரைத்து, 1 டம்ளர் மோரில் கரைத்து காலை வேளையில் மட்டும் தொடர்ந்து 3 நாட்கள் கொடுக்க மேற்படி நோய் நிலைமை அகலும்.


3. சில கிராமப்புற மக்கள் சாதாரணமாக இதன் இலைகளை பறித்து மென்று தின்பது வழக்கம். இதனால்

**டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)**
**சிரேஷ்ட விரிவுரையாளர் , சித்தமருத்துவத்துறை**
**யாழ்.பல்கலைக்கழகம் ,கைதடி.**

உடல் உஷ்ணம் குறைந்து, மேனிக்கு அழகையும்தரும். வெள்ளை சாய்தல் நோய்க்கும் இம்முறை சிறந்த பலனைக் கொடுக்கும். இலை யைத் தனியாக மென்று தின்னும் போது சுவையற்ற விழுவிழுப்புத் தன்மையோடு இருக்கும். அல்லது இலைகளை நிழலில் உலர்த்தி பொடி செய்துசம அளவு சீனிசேர்த்தும்பயன் படுத்த லாம். ஆண்மையும், சுக்கில விருத்தியையும், பலத்தையும் தருவதில் இதற்கு நிகரான மூலிகை வேறு இல்லை.

4. ஓரிதழ் தாமரை வேரை நன்கு கழுவி அம்மியில் வைத்து மை போல அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். இதே மாதிரி சீந்தில் கொடியின் இலை, தண்டு, வேர் இலைகளையும் மைபோல அரைத்துக் கொள்ள வேண்டும். அடுத்து ஆல மரத்தின் விழுதின் நுனிப் பாகத்தை மட்டும் எடுத்து அதையும் மை போல அரைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு வகையிலும் எலுமிச்சம்பழம் அளவு எடுத்து ஒரு வாய கன்ற சீசாவில் போட்டு, 200கிராம் நல்லெண்ணெயை விட்டுப்பிசைந்து தினசரி வெயிலில் வைத்து எடுக்க வேண்டும். இவ்விதமாக 7நாள் வெயிலில் வைத்து எடுத்து எட்டாம் நாள் ஒரு பாத்திரத்தில் விட்டு, அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். மருந்து வெந்து சிவந்து, வாசனை வரும் சமயம் இறக்கி ஆறவைத்து சக்கையை பிழிந்து எடுத்துவிட்டு எண்ணெயை வடிகட்டி சீசாவில் விட்டு வைத்துக் கொண்டுதினசரி தலைக்கு தேய்த்து வந்தால் கூந்தல் உதிர்வது நிற்கும். நீண்ட அடர்த்தியான கூந்தல் முளைக்கும்.

## நல்லூரான் திருவடிக்கு இன்று ஒன்பதாம் திருவிழா



### எம்மைகாத்திடும் கந்தன் நீ

நல்லையம்பதி வாழும் ஆனைமுகன் தம்பி நீ
ஆறுமுகம் கொண்ட அழகன் நீ
சூரனை வதைத்த சூரன் நீ
ஆறுபடைவீட்டில் அமர்ந்தவன் நீ
வேலைக் கையில் ஏந்தியவன் நீ
கௌபாரத்தின் முழுமுதற்கடவுள் நீ
பிரணவத்தின் மத்தியில் இருப்பவன் நீ
எம்மைக்காத்திடும் கந்தன் நீ

*விநாயகன் டினேஸ்கரன்*
*நெடியகாடு -வல்வெட்டித்துறை.*

### கந்தனே காத்தருள்வாய் !

நாரணன் மருகனே! நல்லையின் வேலனே!
தில்லைக் கூத்தனின் மைந்தனே ! வாவா!
வாரண முகத்தவன் தம்பியே ! புள்ளி
மயிலேறும் பாலனே! வள்ளலே ! வாவா!
சூரனை வதைத்துத் தேவரைச் சிறையது
மீட்ட முத்துக் குமரனே! வாவா!
காரண காரியம் யாவையும் அறிந்திடும்
கந்தனே ! காத்திட அப்பனே! வாவா!

*நாயன்மார்கட்டு- ப.மகேந்திரதாசன்.*

### தயாபரனே நின்னடியே தஞ்சமென்போம்

அலங்காரக் கந்தனே திரு முருகையா
அழகியநல் லூர்க்குமரா நீயிருக்க
அலங்கோல மாய்த்தமிழன் புலம் பெயர்ந்து
அவதியுற வேண்டுவதோ தமிழ்க்குமரா
நலங்காணத் திருவுளம் நீ கொண்டிலையோ
நம்துயரந் தீர்க்கவழி கண்டிலையோ
தலம் வந்து தினமு முனைத்தொழுது நிற்போம்
தயாபரனே நின்னடியே தஞ்சமென்போம்

*மட்டுவில்- நல்லதம்பி.*

### தீயன அழித்து நல்லன செய்யும் கந்தா

நல்லை நகர் மீது குடிகொண்ட கந்தா
சரணம் ! சரணம் !
எம் குறை தீர்க்க எழுந்தருளிய கந்தா
சரணம் ! சரணம்!
வேண்டிவரும் பக்தர்களை காத்தருளும் கந்தா
சரணம் ! சரணம் !
அற்புத வரலாற்றை கூறும் கந்தா
சரணம் ! சரணம்!
தீயன அழித்து நல்லன செய்யும் கந்தா
சரணம் ! சரணம்!
என்றும் உன் புகழ் மறவேன் கந்தா
சரணம் ! சரணம் !

*மு.ஆ.சுமன்-வல்வெட்டித்துறை.*

### கருணை கொண்டு அருள் பொழிந்திடுவான்

சரணவப் பொய்கையில் உதித்தவன்
சரணம் போட்டல் வரம் தருவான்
கவிதை நான் படைத்திடவே
கருணை கொண்டு கந்தனவனும்
அருளை பொழிந்திடுவான்
அகிலமதில் புகழ் புகழ்ந்திட

*மகேந்திரன் -மேனன் -கொற்றாவத்தை.*

### ஈசனை ஏத்த இடரடரா

குன்றுடையானைக் கூர் மழுவானைக் கொடிச் சேவல்
ஒன்றுடையானை உமைதனைக் தாயா வுடையானை
நன்றுடையானை நலத்தமிழானைத் திருநல்லூர்
இன்புறுகின்ற ஈசனையேத்த இடரடரா

*சிவ சண்முகவடிவேல்.*

# உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளை அரசாங்கம் புறக்கணித்துள்ளது

## உணவுப்பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவர எம்மால் முடியும் என்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் ஆலோசனை கள்ளைப் புறக்கணித்து அரசாங்கத்தின் கொள்கைகள் மூலம் உணவுப் பிரச்சினையை முடிவுக்குக்



கொண்டு வரமுடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

விவசாய நிலங்களை நிரப்பி அவற்றின் மேல் கட்டடங்களைக்கட்டி, வெளி நாடுகளிலிருந்து உணவுப்பொருட்களை இறக்குமதி செய்யுமாறு உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன தமக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாக அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட ஜனாதிபதி கூறினார்.

எனினும் உலக வங்கி அல்லது சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளை நாங்கள் செவிமடுக்கவில்லை. கடந்த பல வருடங்களாக நாங்கள் உணவு மற்றும் எரிபொருள் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றோம்.

2010ஆம் ஆண்டில் உணவு மற்றும் சக்திவலுவுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என நாங்கள் உணர்ந்துள்ளோம். அதனால்தான் அரசாங்கம் அபி வவமு - ரட ஹதமு திட்டத்தை ஆரம்பித்துள்ளது. இவற்றைக் கருத்தில் கொண்டே நுரைச்சோலை அனல்மின் உற்பத்தி நிலையம் உமாஓய மற்றும் மேற்கொத்மலைத் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது என்றார் ஜனாதிபதி

எதிர்கட்சியிலுள்ள சிலர் சர்வதேச ரீதியில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதற்கு முற்படுகின்றனர்.

எனினும் அரசாங்கத்தின் சவாலை எதிர்கொள்ள அவர்கள் தவறியுள் ளனர். மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊடக சுதந்திரம் இல்லையெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தாலும் ஜப்பான், சீனா, இந்தியா, ஈரான், பாகிஸ்தான் போன்ற நட்பு நாடுகளிடமிருந்து உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து உதவிப் பொருட்கள் தொடர்ந்தும் கிடைத்த வண்ணமே இருக்கின்றன என ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

அதேநேரம், மோசடியில் ஈடுபடும் எவரையும் காப்பாற்றுவதற்குத் தான் முயற்சிக்கவில்லையெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி மோசடியில் ஈடுபட்டவர்கள் குறித்து விசாரணைகளை நடத் துவதற்கு பொலிஸார் இருப்பதாகவும் கூறினார். (அ-6)

# லண்டன் குடிவரவு சட்டவிதிகளை மீறிய இலங்கையர் திருப்பி அனுப்பப்பட்டார்

(லண்டன்)

மாணவர் விசா ஒன்றின் மூலம் பிரித்தானியாவிற்கு சென்ற இலங்கையர் ஒருவரை பிரித்தானிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவினர் கைது செய்து நாடு கடத்தியுள்ளனர்.

குறித்த இலங்கையர் நொர்ட் ஹெம்டனில் உள்ள இரவு நேரக் கேளிக்கை விடுதியொன்றில் பணியாற்றி வந்துள்ளமை விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கைக்கு வந்த மீண்டும் லண்டன் திரும்பிய சந்தர்ப்பத்தில் குறித்த இலங்கையுர் கைது செய்யப்பட்டுள்ளார்.

லண்டன் பல்கலைக்கழக மொன்றில் உயர் கல்வி கற்பதாகவும் அதற்கான ஆவணங்களையும் குறித்த இலங்கையர் சமர்ப்பித்துள்ளார். எனினும் தீவிர விசாரணைகளை மேற் கொண்ட எல்லைப் பாதுகாப்புப் பிரிவினர் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டவை என்பதனைக் கண்டு பிடித்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் ஐக்கிய இராச்சியத்தில் வெளிநாட்டவர்கள் தொழில் புரிவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாதென அந்நாட்டு உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மாணவர் விசாக்களைப் பயன்படுத்தி முழு நேரத் தொழிலில் ஈடுபடுவதனை ஏற்றுக் கொள்ள முடியாதென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வருட இறுதியில் வெளிநாட்டு மாணவர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பிரித்தானியாவில் இயங்கும் உயர் கல்வி நிறுவனங்கள் தொடர்பிலான சட்டவிதிகள் மேலும் கடுமையாக்கப்படவுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-6)

# ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் மீது அரசு குற்றப்பத்திரம் தாக்கல் செய்துள்ளது

## மனித உரிமைகள் கண்காணிப்பகத்துக்கு ரஜீவ விஜயசிங்க கடிதம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் தொடர்பு பட்டுள்ளார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகவும் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் பேராசிரியர் ரஜீவ் விஜயசிங்க மனித உரிமைகள் கண்காணிப்பகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தை விமர்சித்தமைக்காகவே ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் எனினும் இவரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனவும் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்திருந்தது. இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே மனித உரிமைகள் அமைச்சு இந்தக் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளது.

இதில் உண்மை இல்லை பல்வேறு நாடுகளில் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே திஸ்ஸநாயகம் கைது செய்யப்பட்டார். விடுதலைப்புலிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில் திஸ்ஸநாயகம் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியதுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடனும் தொடர்புகளைப் பேணி வந்தார். இதில் எந்தவிதமான பிழையும் இல்லை. தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி விடுதலைப்புலிகளின் பயங் கரவாதச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படு வதாக நிரூ பிக்கப் பட்ட பின்னரும் திஸ்ஸநாயகம் மற்றும் அவரின் வியாபார பங்காளரும் தொடர்ந்தும் புனர் வாழ்வுக் கழகத்துடன் தொடர்புகளைப் பேணி வந்தமைக்கான தகுந்த ஆதாரங்கள் உள்ளன.



விடுதலைப் புலிகளுடன் தொடர்ச்சியாக மேற் கொண்ட ஒப்பந்தங்கள் மற்றும் இலங்கை அரசாங்கத்தை சங்கடப்படுத்தும் சில வெளியீடுகள் போன்ற ஆதாரங்கள் கிடைத்துள்ளன. என்று ரஜீவ விஜயசிங்க கூறியுள்ளார்.

பல கட்ட விசாரணைகளின் பின்னரே தாம் திஸ்ஸநாயகம் மீது குற்றப் பத்திரத்தைத் தாக்கல் செய்திருப்பதாக மனித உரிமைகள் கண் காணிப்பகத்துக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகம் மற்றும் அச்சக உரிமையாளர் ஜசிகரன் அவருடைய மனைவி வளர்மதி ஆகியோர் 160 நாட்களாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-6)

# யாழ். மக்கள் எதிர்நோக்கும் பல பிரச்சினைகளுக்கு விரைவில் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும்

## தொலைபேசி கலந்துரையாடலில் அமைச்சர் டக்ளஸ் உறுதி

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். மாவட்டத்தில் பலதரப்பட்ட அமைப்புக்களுடன் தொலைபேசியில் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைக்கு சாதகமான முடிவை ஏற்படுத்திக்கொடுத்தார்.



யாழ். மாவட்டத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்த சுன்னாகம் சபாதிப்பிள்ளை முகாம் மற்றும் கண்ணகி முகாம் ஆகியவற்றில் வசித்துவரும் 233 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் ஈ.பி.டி.பி. யாழ். மாவட்ட அமைப்பாளரிடம் தாங்கள் எதிர்நோக்கும் அன்றாடப் பிரச்சினைகள் சம்பந்தமாக முறையிட்டனர்.

இது சம்பந்தமாக உடனடியாக யாழ். மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்திரி அலரின் (உதயன்) அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்தில் கொண்டு வந்ததையடுத்து அம்மக்களிடம் தொலைபேசியில் உரையாடி அம்மக்களின் பிரச்சினைகளைகேட்டறிந்து இரண்டு மாதங்களாக வழங்கப் படாமல் இருக்கும் நிவாரணத்தை உடனடியாக வழங்க அரச அதிபருக்கு பணிப்புரை வழங்கியதோடு ஒரு தொகை உணவுப் பொருட்களை யாழ். மாவட்ட அமைப் பாளர் ஊடாக மேற்படி இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கினார்.

மேலும் தொண்டர் ஆசிரியர் சங்கப்பிரதிநிதிகள், உடற் கல்வி டிப்ளோமா பட்டதாரிகள் ,தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைச்சு உத்தியோகத் தர்கள் ஆகியோரும் தங்களுடைய நியமனம் மற்றும் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் அமைச்சருடன் தொலைபேசியில் கலந்துரையாடினர்.

இது தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த தோடு , யாழ்மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் சம்பந்தமாகவும் கலந்துரையாடி கூடிய விரைவில் பல பிரச்சினைகளுக்கு முடிவு காணக்கூடியதாக இருக்கும் என்ற நம்பிக்கையும் திரண்டிருந்த மக்களுக்கு ஊட்டினார். (அ)

# அகதிகளாக மேலும் 5பேர் தமிழகம் சென்றனர்

(சென்னை)

இலங்கையில் இருந்து 5 பேர் மேலும் அகதிகளாகத் தமிழ் நாட்டுக்குச் சென்றுள்ளனர். வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே தமிழகத்திற்கு இடம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் மன்னார் தாழ்வுபாடு கடற்கரையோரப் பகுதியில் தனுஷ்கோடி அரிச்சல் முனைக்கு நேற்று முன்தினம் வந்தடைந் துள்ளதாகத் தமிழகக் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் இவர்கள் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டிருப்பதாகத் தமிழக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இந்தியா வருவதற்காக மன்னாருக்கு வந்த போது தம்மை இராணுவத்தினர் கைது செய்ததாக முல்லைத்தீவைச் சேர்ந்த ஜோசப் என்பவர் இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளின் பின்னரே தாம் விடுவிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# அமைச்சர் கெஹெலியவின் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் இளைஞர் கைது

## திவயின சிங்கள நாளிதழ் தகவல்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை அமைச்சரும் பாதுகாப்பு விவகார பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல கலந்து கொள்ள விருந்த கூட்டம் நடைபெறவிருந்த பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய தமிழ் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மெனிக்ஹின்ன பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த குறித்த கூட்டம் நடைபெறவிருந்த பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் டக்வாரி பகுதியைச் சேர்ந்தவரென தெரியவருகிறது.

சந்தேக நபர் அமைச்சர் ரம்புக்வெல கலந்து கொள்ளவிருந்த கூட்டம் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொண்டு நாசகார செயல்களில் ஈடுபட முயன்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். மெனிக்ஹின்ன பொலிஸார் தொடர்ந்தும் சந்தேக நபரை விசாரித்து வருகின்றனர். (அ-6)

# ஆலையடிவேம்பில் அத்துமீறல் சம்பவங்கள் அதிகரிப்பு

## பத்மநாதன் எம்.பி. முறையீடு

(கொழும்பு)

அம்பாறை, ஆலையடிவேம்பு பகுதியில் சோதனை எனும் பெயரில் படையினரின் அத்துமீறல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் க. பத்மநாதன் அரசாங்க உயர் மட்டத்தினரின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளனர். இரவு 10மணிக்கு பின்னர் சுவர் ஏறி குதித்து வீடுகளுக்குள் புகும் படையினர் சோதனை எனும் பெயரில் பெண்களுடன் தவறாக நடக்க முற்படுகின்றனர். மாணவிகளின் அடையாள அட்டைகளை பரிசோதிக்கும் படையினர் அவர்களின் பெயர்களை கூறுமாறு வற்புறுத்துகின்றனர். படையினரின் இத்தகைய நடவடிக்கைகளினால் இப் பகுதி மக்கள் பெரும் அச்சத்தின் மத்தியில் வாழும் நிலை உருவாகியுள்ளது என்றும் எம். பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி கண்ணகிபுரம், வட்டமடு, சின்னப்பனங்காடு பகுதியில் இரு பெண்களுடன் தவறாக நடந்து கொள்ள படையினர் முயற்சித்துள்ளனர். இரு பெண்களும் கூக்குரல் இட்டதையடுத்து அயலவர்கள் வந்ததினால் படையினர் தமது முயற்சியினை கைவிட்டுச் சென்றுள்ளனர். எனவே இத்தகைய சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பத்மநாதன் எம். பி. அரசஉயர்மட்டத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-6)

போவது சரியான பாதையாக இல்லாத போது – வேகமாக ஓடுவதால் என்ன பயன்?
-சிரீஸ்

வலம்புரி

## நாராயணனின் ஆலோசனை இலங்கை அரசுக்கு ஏற்புடையதா?

தமிழர்களின் ஆதரவைப் பெறும் வரை போரில் இலங்கை அரசாங்கம் வெல்ல முடியா தென இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே. நாராயணன் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவம் போர் நடவடிக்கையில் வெற்றி கண்டாலும் அதனைப் பூரண வெற்றியாகக் கூற முடியாதெனக் கூறும் நாராயணன் இந்த ஆலோசனை இலங்கை அரசுக்கு மகிழ்வை தராதெனவும் கூறியிருப்பது இங்கு நோக்கத்தக்குரியது.

தமிழ் மக்களின் ஆதரவைப் பெறும் வரை இலங்கை அரசு போரில் வெற்றி பெற முடியா தென கூறும் நாராயணன் தமிழ் மக்களின் ஆதரவைப் பெறுவதற்கான வழி முறைகளையும் கூறத் தவறவில்லை.

அவரின் ஆலோசனையில் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதன் மூலமாகவே தமிழ் மக்களின் மனங்களை வெல்ல முடியு மென குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் உரிமைகளை வழங்குவதன் மூலமாகவே அரசு வெற்றியடைய முடியு மென்ற நாராயணனின் கருத்து இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் தீர்வு காணப்படவேண்டுமென்பதை சுட்டி நிற்கின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமிடத்து இலங்கையில் அமைதி ஏற்பட்டுவிடும்.

அமைதி ஏற்பட்ட நாட்டில் யுத்தத்திற்கு இடமே இருக்காது. அங்கு அமைதியும், சமாதானமும் நிரந்தரமாகிவிடும்.

இதனையே மறைமுகமாக இலங்கை அரசு போரில் வெல்வதற்கு தமிழ் மக்களின் மனங்களை வெல்ல வேண்டுமென்ற சாரப்பட நாராயணன் கூறியுள்ளார்.

நாராயணனின் கருத்தை இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளாதென்பது தெரிந்த –தெளிவான முடிவு.

ஏனெனில் இலங்கை அரசு யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதன் காரணமே அரசிடம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எந்த விதமான தீர்வுத் திட்டமும் இல்லை. தீர்வு எதனையும் தமிழ் மக்களுக்கு வழங்கும் மன நிலையும் இல்லை.

ஆக அரசைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முயற்சி செய்வது போன்ற மாயையை உலக அரங்கில் அரங்கேற்ற வேண்டும்.

அத்தகையதோர் மாயைத் தோற்றத்துக்குள் மறைந்து கொண்டு யுத்தம் நடத்தி தமிழ் மக்களை வலுவற்றவர்களாக்குவதே நோக்கமாகும்.

இந்நோக்கத்தை அடைவதற்கான செயலாக்கங்களே நடந்து வருகிறது.

இந்நிலையில் சமாதானம் தொடர்பிலான எந்த ஆலோசனைகளும் இலங்கை அரசுக்கு வேப்பங்கச்சலாகவே இருக்கும்.

அவ்வகையில் நாராயணனின் ஆலோசனை மட்டும் இனிக்கவா போகிறது என்ன?

# மஹரகம, களுத்துறை கலாசாலைகளில் தமிழ் ஆசிரியர்களை மீண்டும் இணைத்துக் கொள்வதில்லையென முடிவு

## இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் விசனம்

(கொழும்பு)

மஹரகம மற்றும் களுத்துறை ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் பயிற்சி பெற்று வந்த தமிழ் ஆசிரியர்களை மீண்டும் இக் கலாசாலைகளில் இணைத்துக்கொள்வதில்லையென்றும் வடக்கு கிழக்கிலே பயிற்சி பெற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச் செயற்பாடானது இன ரீதியாக பிரிவினையையும் அதேவேளை நாட்டை பிரிப்பதற்கும் ஒப்பான செயலாகும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் விசனம் தெரிவித்தார்.

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது,

மஹரகம களுத்துறை ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட வடபகுதியையும் கிழக்கு மாகாணத்தையும் சார்ந்த நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் ஆங்கில மொழிப் பயிற்சியை பெற்று வந்தனர். கடந்த ஜுன் மாதம் பயிற்சி பெற்றவர்களில் இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டதால் ஆங்கில மொழிப் பயிற்சிப் பிரிவு மூடப்பட்டு பயிற்சி பெற்று வந்த வடக்கு கிழக்கு மாகாண ஆசிரியர்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

எதிர்வரும் செப்டம்பர் 1 ஆம் திகதி இப் பயிற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாகவும் ஆனால் வட பகுதி கிழக்கு மாகாண தமிழ் ஆசிரியர்களை மஹரகம களுத்துறை கலாசாலைகளில் சேர்த்துக்கொள்வதில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிங்கள ஆசிரியர்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர். கிளிநொச்சி முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் வவுனியா கலாசாலைக்கும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மட்டக்களப்பு கலாசாலைகளுக்கும் மாற்றப்படவுள்ளனர்.

இனங்களுக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவதாகக் கூறும் அரசாங்கம் இதன் மூலம் இனப் பாகுபாட்டை ஏற்படுத்தியுள்ளதோடு நாட்டை பிரிப்பதைப் போன்ற செயற்பாட்டையும் முன்னெடுத்துள்ளது.

இது பிழையானது இதனைத் தொடர இடமளிக்க முடியாது இத்தகைய நடவடிக்கை தொடர்ந்தால் எதிர்காலத்தில் விபரீத விளைவுகள் ஏற்படும் என்றார். (அ-6)

# உலகத்திலேயே இலங்கையில் மட்டுந்தான் இரத்ததானத்திலும் ஊழல்–டாக்டர் ஜயலத் எம்.பி.விசனம்

(கொழும்பு)

புரையோடிப்போயுள்ள பயங்கரவாதப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவதாக கூறிக்கொண்டு யுத்தம் புரியும் மஹிந்த அரசு யுத்தம் என்ற போர்வையில் இந்நாட்டை மேலும் மேலும் குட்டிச்சுவராக்குவதுடன் பொதுமக்களின் இரத்தத்தோடும் விளையாடத்தொடங்கிவிட்டது என்று ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயலத் ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்து வரும் இராணுவ வீரர்களுக்கு இரத்தம் வழங்குவதாக கூறி பொதுமக்களது இரத்தத்தை தானமாகப்பெற்று அவற்றை உயிருக்கு ஊசலாடும் இராணுவத்தினருக்கு வழங்காமல் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தி காலம் கடத்தப்பட்டு பழுதாக்கப்பட்டமை மஹிந்த அரசின் மாயாஜால ஆட்சியை எடுத்துக்காட்டுகின்றது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

எதிர்காட்சி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத்தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத்தெரிவிக்கையில் கூறியதாவது,

இந்த நாட்டில் வாழும் மக்களது இதயத்தை இரத்தத்தை மொத்தத்தில் அவர்களது வாழ்க்கையையே பாதிக்கும் ஒரு விடயத்தைத்தான் நான் ஓர் அரசியல் வாதி என்பதற்கு அப்பால் ஓர் வைத்தியன் என்ற வகையில் ஊடகங்களுக்கு தெரிவிக்கவேண்டிய கடப்பாடு எனக்குள்ளது.

மக்கள் தாமாக விரும்பி வழங்குவதுதான் இரத்ததானம். ஆனால் இந்த இரத்ததான விடயத்திலும் ஊழல் இடம் பெற்றிருப்பது உலகிலேயே இலங்கையில் மட்டும் தான் என்பது கவலையளிக்கும் தகவலாகும்.

இம் மாதம் 10ஆம் திகதி எனக்குக்கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்புகளுக்கு இணங்க காலம் கடந்த இரத்த சேகரிப்பு உறைகள் வெளியகற்றப்படவுள்ளதாக கேள்விப்பட்டேன். அதன் படி நானும் வைத்திய அதிகாரிகள் மூவரும் குறிப்பிட்ட களஞ்சியசாலைக்குச்சென்று அது குறித்து பார்வையிட சென்றபொழுது அது தாழ்ப்பால் இட்டு மூடப்பட்டிருந்தது. வெளியே இருந்து கண்ணாடி வழியாக பார்த்த போது உள்ளே காட்போட் பெட்டிகள் இருந்ததுடன் நிலம் நனைந்தாற் போலும் காணப்பட்டது.

அன்றைய தினம் மாலை பிரதம பாதுகாப்பு அதிகாரியால் நான் குறித்த மூன்று வைத்திய அதிகாரிகளை அச்சுறுத்தியதாகவும் அந்த களஞ்சியசாலையை சீல் வைத்து மூடியதாகவும் எனக்கு எதிராக முறையிடப்பட்டிருந்தது.

நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று நான் உண்மை நிலைவரத்தை தெரியப்படுத்தினேன் பொலிஸாரும் எனக்கு பூரண ஒத்துழைப்பு தந்திருந்தனர். மறு நாள் நாம் குறித்த களஞ்சியசாலைக்குச் சென்று காலை 10மணிமுதல் மாலை வரை பரிசோதித்தபோது அங்கு குப்பைகள் போட பயன்படுத்தப்படும் கறுப்பு நிற பொலித்தீன் பைகளிலும் காட்போட் பெட்டிகளிலும் இரத்த சேகரிப்பு உறைகள் காலம் கடந்த நிலையில் பயன் படுத்த முடியாதவாறு காணப்பட்டன.

அரசாங்கம் யாரை ஏமாற்றப்பார்க்கிறது? இந்த நாட்டை இராணுவம் பாதுகாக்க பாடுபடுகின்றது.

ஆனால் மஹிந்த அரசோ இராணுவத்தை விற்க முனைகின்றது. அரசாங்கத்தின் அமைச் சர்களான மஹிந் தானந்த அளுத்கமகே, டிலான் பெரேரா, டலஸ் அழகப்பெரும போன்றோர் இந்நாட்டில் இலஞ்சம் ஊழல் இடம்பெறுவதாகவும் அவற்றை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் எனவும் வாய் கிளிய மேடைகளில் பேசுகின்றனர்.

ஆனால் அவர்களே இலஞ்ச ஊழல்களுக்கு துணை போகும் நிலைமையே இங்கு காணப்படுகின்றது. மக்களின் கண்களில் மண்ணைத்தூபி அரசாங்கம் கபட நாடகத்தை அரங்கேற்றிக்கொண்டிருக்கின்றது.

ஆனால் நாம் அதற்கு இடம்கொடுக்க மாட்டோம். அரசின் நயவஞ்சக தந்திர செயற் பாடுகளை ஊடகங்கள் மூலமாக மக்களுக்கு தெரியப் படுத்துவோம்.

இராணுவத்தினரின் உயிரைப்பாதுகாக்க பயன்படுத்த வேண்டிய இரத்தம் மற்றும் இரத்த சேகரிப்பு உறைகள் ஒழிக்கப் பார்ப்பதுடன் புதிய லேபல்களும் ஒட்டப்பட்டு ஏமாற்றப் பார்க்கின்றனர்.

சுகாதார அமைச்சர் இது விடயத்தில் கண்ணை மூடிக் கொண்டிருக்கின்றாரா எனக் கேட்க விரும்புகின்றேன். அவர் இவ்விவகாரம் குறித்து அறியாமல் இல்லை. உடனடியாகவே அவர் இதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மக்களின் உயிரோடு விளையாடும் இவ் விவகாரத்தை ஊடகங்கள் வெளிப்படுத்தி அரசின் கபடத்தனத்தை அம்பலமாக்க வேண்டும் என்றார். (அ-6)


# அனைத்துயிர்களின் பாதுகாவலன் பகவான் பாபா

ஆரயா முயன்று தோல்வியுற்று, மனிதனின் வார்த்தைகள் எங்கிருந்து திரும்புகின்றனவோ கற்பனையாலும் அடைய முடியாதது எதுவோ அதுதான் பகவான் பாபா பகவானை எத்தனையோ விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆராய முற்பட்டனர். பின்பு சுவாமியின் பொற்பாதமே தஞ்சமென சரணாகதியடைந்தவர்கள் எத்தனையோ பேர் நான் மனிதனல்ல; தேவனல்ல, தேவதூதனோ அதுவும் அல்ல. மனித வாழ்க்கையின் நான்கு நிலைகளில் எந்த நிலையையும் சேர்ந்தவனல்ல. நான் சத்தியத்தை உபதேசிக்கும் குரு. அன்புவடிவானவர். அன்பு நினைவில் சத்தியமாகவும் செய்கையில் நலமாகவும் உணர்வில் அழகாகவும் இருக்கும் பிரேமை எனது வடிவமாகும்.

சாயியின் உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எவரெல்லாம் பகவானின் உலகத்தில் வாழ்க்கின்றார்களோ அவர்களையெல்லாம் சுவாமி பாதுகாப்பதாக உறுதியளித்துள்ளார். நாம் எல்லோரும் ஏதோ ஒருவகையில் சாயின் நாமத்தோடு அவரின் வாழ்வோடு ஒன்றியிருத்தல் வேண்டும். அப்போது துன்ப துயரம் நம்மையணுகாது பகவானே அருளுகின்றார். சகலதையும் துறந்து உலகப் பற்றற்று என் மீது பற்றுவை என்று சொல்லவில்லை. உபகாரம் செய்யாதிருந்தாலும் பரவாயில்லை அபகாரம் செய்யாதே மற்றவரை மனதளவில் கூட துன்பம் செய்யாதே அன்பே உனது தெய்வம். இவ்வாறு வாழ்ந்தாலே போதும் நான் உன்னைப் பாதுகாப்பேன்.

**ஜெய்சாயிராம்**

ஒரு கான்சர் நோயாளி புட்டபர்த்திக்கு சென்றார். இடது கையில் கான்சர் பயங்கரமாகக் காணப்பட்டது. பல இடங்களுக்கும் சென்று நோய்தீராது இறுதியாக சுவாமியிடம் வந்தார். அங்கு ஒரு வாரகாலமாக முதல் வரிசையில் இருந்து சுவாமி அவருக்கண்மை யில் வரும் போது நெஞ்சடைத்து தனது துன்பத்தை அழுது வேண்டினார். அவை சுவாமி யின் காதுக்கு எட்ட வில்லையென எண்ணி மறுநாளே ஊர்திரும்ப எண் ணினார். மற்றவர்க ளும் அவருக்கு ஆறுதலாக இது தான் சுவாமியின் வழக்கம் நீங்கள் தொடர்ந்து வணங் குங்கள் என்றனர். அப்போது சுவாமி அவரருகில் வந்தாரே தவிர அவரைப்பார்க்கவில்லை ஆனால் சுவாமியின் அங்கி பரந்து இவர ருகில் வரவே அதனைத் தொட்டு நமஸ்கரித்தார்.தரிசனம் முடித்து தனது அறைக்குச் சென்று பூட்டிகொண்டார். சிறிது நேரத்தில் அறைக்குள் இருந்து கூச்ச லும் கும்மாளமுமாக இருந்தது. வெளியே இருந்தோர் ஓடிச் சென்று கதவைத் தட்டினார். உள்ளே இருந்தவர் கதவைத் திறந்து தனது இடது கையை மேலும் கிழுமாக உதறியும் வீசியும் காட்டினார். என்ன நடந்தது என மற்றவர்கள் வினவ அவரும் சுவாமி என்னருகில் வரும்போது அவரின் அங்கியை தொட்டு வணங்கி னேன். அதன் பிறகு கான்சர் காணாமலே போய் விட்டது என்றார்.



**யாதவன்**

## ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்

வேலணை பிரதேச சபை நயினாதீவு உப அலுவலக நூலக சமூகத்தினரால் 'ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்' எனும் நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை மு.ப.10.30 மணிக்கு நயினாதீவு பிரதேசசபை பொது நூலக மண்டபத்தில் பொறுப்பதிகாரி ந.மோகனரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ்,எம்.ஏ (பொருளியல்),சிறப்பு விருந்தினராக நயினாதீவு மகா வித்தியாலய அதிபர் செ. பகீரதன், நாகபூசணி வித்தியாலய அதிபர் சோ.குகனேசன், கணேசா வித்தியாலய அதிபர் தி.சிவபாலன், வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி கு.சண்முகரத்தினம், கிராம அலுவலர் க.பொ. இ. குலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர். இந்நிகழ்வில் கணேஷா கனிஷ்ட வித்தியாலயம் உப அதிபர் கனகஜீவசீலன் பல வருடங்களாக மாணவர்களுக்கு கணித பாடத்தில் ஆற்றிவரும் அளப் பெரிய சேவையையிட்டு கௌரவித்துப் பாராட்டப்பட உள்ளனர். (ஓ)

## தடை விதிக்கப்பட்ட நாட்கள் தரவு வழங்க கோரிக்கை

வடமராட்சி கிழக்கு மணற்காடு கடற்றொழில் கூட்டுறவு சங்கம் இயங்கத் தொடங்கியுள்ளது. குடத்தனை வடக்கு , குடத்தனை கடற்றொழில் சங்கங்களை இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் கடற்றொழில் பரிசோதகரை கேட்டுக் கொண்டுள்ளார்.

மேலும் கடற்றொழில் தடை விதிக்கப்பட்ட நாட்களை தரவாக எடுத்து தரும் படி கடற்றொழில் பரிசோதகரை உதவி அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-35)

## பூரணை விழாவும் ஜெயந்தி விழாவும்

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் பூரணை விழாவும் சுவாமி நிரஞ்சனானந்த ஜெயந்தி விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு தாவடி மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பஜனை, சிறப்பு ஆன்மீக உரை,த அஷ்டோத்திர நாமார்ச்சனை, தீபாராதனை என்பன இடம் பெறவுள்ளது. (ஓ)

## ஸ்ரீ அம்மா பகவான் மூல மந்திர பூஜை

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீ அம்மா பகவான் மூல மந்திர பூஜை நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் தினமும் மாலை 5.30 மணி முதல் 6.30 மணிவரை நடைபெறுகின்றது.

அனைத்து பக்தர்களும் கலந்து பயன் பெறுமாறு ஸ்ரீ கல்கி ஆன்மீக மையத்தினர் கேட்டுக்கொள்கின்றனர். (இ)

## ஒலிபெருக்கி பாவனைக்கான அனுமதி

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு பகுதியில் உற்சவம் திருவிழாக்கள் சம்பந்தமாக ஒலிபெருக்கி அனுமதி பெற வேண்டுமாயின் ஒருகிழமைக்கு முன்பே சம்பந்தப்பட்டவர்கள் இருக்கும் பகுதியில் இருந்து அனுமதியை பெற வேண்டும் என அண்மையில் நடைபெற்ற மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் உதவி அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது. (அ-35)

## சிறப்புச் சொற்பொழிவும் கூட்டுப்பிரார்த்தனையும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் சிறப்புச் சொற்பொழிவு மற்றும் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு 'அபிராமி என்னும் அருமருந்து' எனும் பொருளில் யாழ் பல்கலைக்கழக இந்து நாகரீகத்துறை தலைவர் கலாநிதி வேதநாதன் சொற்பொழிவாற்றுவார்.

அத்துடன் திருநெல்வேலி சைவவித்தியாலய அபிவிருத்திச் சங்க அறநெறிப்பாடசாலை, யாழ்.வண்ணை ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (அ)

# யாழில் பொருட்களின் விலையினை குறைப்பதற்கு கப்பல் செலவை அரசு பொறுப்பேற்க வேண்டும்

## சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டின் ஏனைய இடங்களிலும் பார்க்க யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விலைகள் பல மடங்காக இருப்பதைச் சுட்டிக்காட்டி, இதனைக் குறைப்பதற்கு கப்பல் செலவை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு கோரிக்கை விடுத்துள்ளதாக அந்த அமைப்பின் இணைச் செயலாளர் எஸ்.பரமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கான தரைவழிப்பாதை மூடப்பட்டுள்ளதையடுத்து, கப்பல் மூலமாகவே யாழ்ப்பாணத்திற்குப் பொருட்கள் எடுத்து வரப்படுகின்றன.

கப்பல் போக்குவரத்திற்குரிய செலவுகள் உட்பட அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்கியதாகவே யாழ்ப்பாணத்தில் பொருட்களின் விற்பனை விலை நிர்ணயிக்கப்படுவதாகவும், இதனால் பொருட்களின் விலைகள் பல மடங்காக யாழ்ப்பாணத்தில் அதிகரித்திருப்பதாகவும், யாழ்.மாவட்ட சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாகவும் பரமநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சங்கக் கடைகளில் சீனி 68ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்தாலும், ஒரு ஆளுக்கு அரைக்கிலோ மட்டுமே கொடுக்கப்படுவதாகவும், வெளிக் கடைக்ளில் 80,90 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும், அரிசி 90 ரூபா தொடக்கம் 120 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் பரமநாதன் தெரிவித்துள்ளார். கொழும்பில் 95 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் பூடு யாழ்ப்பாணத்தில் 320 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கொழும்பில் 60.75 ரூபாவுக்குக் கிடைக்கின்ற உருளைக்கிழங்கின் யாழ்ப்பாணத்து விலை 150 ரூபா. இத்தகைய அதிகரித்த விலையைக் குறைப்ப தற்கு வழி கப்பல் செலவினங்களை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும். இதுதான் விலைகளைக் குறைப்பதற்குரிய ஒரேயொரு வழி எனவும் யாழ். மாவட்ட சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவின் இணைச் செயலாளர் எஸ். பரமநாதன் தெரிவித்துள்ளார். (அ-6)

## அலங்கார உற்சவம்

(கோப்பாய்)

அச்செழு மத்தி திருவருள்மிகு ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம் நேற்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறஉள்ளது. 11 ஆம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

உற்சவ நாட்களில் தினமும் மாலை 3 மணிக்கு சிவலிங்க யோககேந்திர நிலையத்தின் தலைவர் நா.நவராஜ் தலைமையில் சைவப் புலவர் நித்திய தசித்ரன்,சைவப் புலவர் கந்த சத்திய தாசன் ,சிதம்பர நாதன் சசீவன் ஆகியோரால் 'இறைபக்தியில் இன்பம் காண்போம்', 'மஹோற்சவம் உணர்த்தும் ஐந்தொழில் தத்துவம்', 'விரதமும் வாழ்வும்', 'அம்பிகையைச் சரணடைந்தால் அதிக வரம் பெறலாம்', 'கோமாதா எங்கள் குலமாதா', 'சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்', 'பாடும் பணியே பணியாய் அருள்வாய்', 'ஆலயம் தானும் அரன் என தொழுமே' எனும் தலைப்புகளில் தொடர் ஆன்மீக சொற்பொழிவுகளும் இடம் பெறும். (ஓ)

## யாழ்.செய்திகள்

## விளையாட்டுப் போட்டி

வலிகாமம் மேற்கு பிரதேச சபையால் உள்ளூராட்சி வர்ரத்தினை முன்னிட்டு நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டி இன்று வியாழக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரியம்மன் கோவில் வீதியில் அமைந்துள்ள திறந்த வெளியரங்கில் , வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர் சுப்பிரமணியம் புத்திசிகாமணி தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் , சிறப்பு விருந்தினர்களாக யாழ்.இ.ச.பேரம்பலம் சக நிறுவனம் இ.ச.பே.நாகரத்தினம் , ஈஸ்வரன் ரேடர்ஸ்- ந.சிவபரன் , சுன்னாகம் ,லவனேசகுமார் , கௌரவ விருந்தினர்களாக யாழ். பி.உ.உ. ஆணையாளர் அலுவலக சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் பி.பாலசுப்பிரமணியம், பிராந்திய பொறியியலாளர் கே.வரதராஜா , யாழ்.விலை மதிப்பீட்டுத் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் தி.உதயசூரியன் ஜே.பி. ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஓ)

## பாடல் போட்டி

கொழும்புத்துறை றெசாறியன் சனசமூக நிலையம் நடாத்தும் பாடல் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (அ-51)

## ஆன்மீக நிகழ்வு

(மருதங்கேணி)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வசந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் நாளை வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணிக்கு ஈவினை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வு இடம்பெறும். (அ-35)

***

புலோலி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வு தொடரில் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் 'அடிமை போல' எனும் விடயம் பற்றி வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (அ-35)

***

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான்ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் 16 ஆம் திகதி சனிக்கிழமை போயா ஆன்மீக நிகழ்ச்சிகள் அதிகாலை 5. மணிக்கு நகரசங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவு பெறும். (அ)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியத்தின் கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு விரிவுரையாளர் மண்டபத்தில் இடம்பெற இருப்பதால் விளையாட்டு விஞ்ஞான அலகின் சகல அணி மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியத் தலைவர் ரி. கரிகரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

## மாணவர்கள் பாடசாலை செல்லாமல் தொழிலுக்கு சென்றால் நிவாரணம் இல்லை

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு பாடசாலை அதிபர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலின் மூலம் பாடசாலைக்கு செல்லாத மாணவர்கள் ஒழுங்காக செல்வதற்கான ஏற்பாடுகள் மீண்டும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.


பெற்றோர்கள் குறிப்பிட்ட வயதுக்குட்பட்ட பிள்ளைகளை தொழிலுக்கு அனுப்பக்கூடாதெனவும் மீறி அனுப்புவோர்க்கான நிவாரணம் வருமானம் அதிகரிப்பதன் காரணமாக நிறுத்தப்படும் எனவும் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரால் தெரிவிக்கப்பட்டது. (அ-35)

## இலவச ஆங்கில பயிற்சிநெறி

(சங்கானை)

CA நிறுவன அனுசரணையோடு வட்டுக்கோட்டை அபிவிருத்தி நிறுவனத்தால் சங்கானைக் கோட்டத்திற்கு உட்பட்ட ஐந்து பாடசாலை மாணவர்களின் ஆங்கில அறிவை மேம்படுத்தும் நோக்கோடு 30 மாணவர்களை தெரிவுசெய்து ஐந்து நாட்களுக்கு இலவச ஆங்கிலப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

இவ் ஆங்கிலப் பயிற்சி வகுப்பில் விரிவுரையாளர்களாக உடுவில் மகளிர் கல்லூரி ஆசிரியர் விழிசிட்டியூர் கா.சுப்பிரமணியம், வி.லோகேஸ்வரன் ஆகியோர் செயற்படுகின்றனர். (அ-27)



அராலி மேற்கு அம்மன் தேவஸ்தான ஆடிப்பூர மாலை உற்சவத்தில் அம்மன் நாகசடம் அணிந்து காட்சியளிப்பதையும், வசந்தமண்டபத்தில் ஆலயப் பிரதமகுரு சர்வேஸ்வர சர்மா பஞ்சாராத்தி காட்டுவதையும், மங்கள வாத்தியம் முழங்க சுவாமி வெளிவீதி உலா வருவதையும் அடியவர்கள் பொங்கல் படைத்து வழிபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-குரு)

# ஒலிம்பிக் வரலாற்றில் பதினொரு தங்கம் வென்று பெல்ப்ஸ் சாதனை படைத்தார்

அமெரிக்க் நீச்சல் வீரர் மைக் கெல் பெல்ப்ஸ் 11-வது தங்கப்பதக் கத்தை வென்று ஒலிம்பிக் வரலாற் றிலேயே அதிக தங்கப்பதக்கங் களை வென்ற வீரர் எனும் சிறப்பை பெற்று புதிய வரலாற்றை படைத் திருக்கிறார்.

நேற்று அவர் 200 மீற்றர் பட்டர் பிளை மற்றும் 200 மீற்றர் பிரிஸ் டைல் ரிலே ஆகிய 2 பிரிவுகளிலும் தங்கத்தை வென்று பீஜிங் ஒலிம் பிக் போட்டியில் 5-வது தங்கப்பதக் கத்தை வென்றுள்ளார்.

இதுவரை அவர் வென்றுள்ள 5 தங்கப்பதக்கங்களுமே உலக சாத னை மூலம் பெறப்பட்டுள்ளது என் பது குறிப்பிடத்தக்கது.

சாதனை நீச்சல் வீரராக கருதப் படும் அமெரிக்காவின் மைக்கெல் பெல்ப்ஸ் 8 தங்கப்பதக்கங்களை வெல்ல வேண்டும் எனும் இலக் கோடு பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் களம் இறக்கியிருக்கிறார்.

அவர் ஏற்கனவே 400 மீற்றர் தனி நபர் மெட்லே 4X400 மீற்றர் பிரிஸ்டைல். 200 மீற்றர் பிரிஸ் டைல் ஆகிய 3 பிரிவில் தங்கப் பதக்கம் பெற்று 3 பிரிவிலும் புதிய உலக சாதனை படைத்தார்.

நேற்று பெல்ப்ஸ் மேலும் 2 தங் கப்பதக்கம் பெற்றார். 200 மீற்றர் பட்டர்பிளை 4X400 மீற்றர் பிரிஸ் டைல் தொடர் நீச்சல் ஆகிய வற் றில் அவர் தங்கப்பதக்கம் பெற் றார். பீஜிங் ஒலிம்பிக்கில் அவர் பெற்ற 5-வது தங்கப்பதக்கம் இது வாகும்.

இதன் மூலம் ஒலிம்பிக்கில் பெல்ப்ஸ் 11 தங்கம் வென்று புதிய வரலாறு படைத்தார். கடந்த 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸ் ஒலிம்பிக் கில் 6 தங்கம் வென்று இருந்தார்.

ஒலிம்பிக் வரலாற்றில் மார்க்ஸ் பிட்ஸ், கார்ல் லீவிஸ், நூர்மி, லார் யசா ஆகியோர் அதிகபட்சமாக 9 [illegible]ம் வென்று இருந்தனர்.

200 மீற்றர் பட்டர்பிளை நீச்ச லில் பெல்ப்ஸ் புதிய உலக சாத னை படைத்தார். அவர் பந்தய தூரத்தை ஒரு நிமிடம் 52.03 வினாடியில் கடந்தார். கடந்த ஆண்டு மெல்போர்னில் நடந்த உலக போட் டியில் அவர் ஒரு நிமிடம் 52.09 வினாடியில் கடந்ததே சாதனை யாக இருந்தது.

ஹங்கேரி வீரர் லாஸ்லோ வெள்ளியும் (ஒரு நிமிடம் 52.70 வினாடி), ஜப்பான் வீரர் தகஷி வெண்கலமும் (ஒரு நிமிடம் 52.97 வினாடி பெற்றனர்.

மேலும் சிறிது நேரத்தில் ஆரம்பமான 4X200 பிரிஸ்டைல் தொடர் நீச்சலில் பெல்ப்ஸ், ரியான், பெர்னஸ், பீட்டர் ஆகியோர் அடங் கிய அமெரிக்க அணி உலக சாதனை படைத்தது. பந்தய தூரத்தை 6 நிமிடம் 58.56 வினா டியில் கடந்தது.

இதற்கு முன்பு அமெரிக்க அணி 7 நிமிடம் 3.24 வினாடியில் கடந்ததே சாதனையாக இருந்தது.

ரஷ்யாவுக்கு வெள்ளியும், அவுஸ்திரேலியாவுக்கு வெண்கல மும் கிடைத்தது.

அவர் திட்டமிட்டபடி மீதமுள்ள 3 போட்டிகளிலும் தங்கத்தை வென் றால் ஒரே ஒலிம்பிக் போட்டியில் 7 தங்கப்பதக்கங்களை வென்ற அமெரிக்க நீச்சல் வீரர் மார்க் ஸ்பிட்



சின் சாதனையை முறியடித்து மற்றொரு வரலாற்று சாதனையை நிகழ்த்துவார்.

## ஒலிம்பிக் போட்டியைப் பார்க்க 2ஆயிரத்து 400 கி.மீ தூரம் சைக்கிளில் சென்ற மூதாட்டி

(பீஜிங்)

சீன தலைநகர் பீஜிங்கில் ஒலிம் பிக் போட்டிகள் கடந்த 8ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகி றது.

பதக்கப்பட்டியலில் தற்போ தைக்கு சீனாவே முதலிடம் வகிக்கி றது. இந்த ஒலிம்பிக் போட்டியை பார்க்க சீனாவின் ஹினான் மாகா ணத்தில் இருந்து சியாவோ சிங் குயி என்ற 97 வயது மூதாட்டி பீஜிங் நகருக்கு சென்றார்.

அந்த 97 வயது பாட்டி தனது பேரனுடன் மூன்று சக்கர சைக்கிளி லேயே போட்டி நடக்கும் இடத்திற் குச் சென்றார்.

பாட்டியின் பேரனும் 5 வாரமாக மூன்று சக்கர சைக்கிளில் பயணம் செய்தனர்.

சீன வீராங்கனை சாங்நிங் கல ந்து கொள்ளும் பெண்கள் பட் மின்டன் போட்டியைப் பார்க்க வேண்டும்.

வெற்றி பெற்ற வீராங் கனையை பாராட்ட வேண்டும் என்ற பாட்டியின் நீண்டநாள் ஆசை யாம்.

பாலா




## பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 17 | 5 | 5 | 27 |
| அமெரிக்கா | 10 | 8 | 11 | 29 |
| தென்கொரியா | 6 | 6 | 1 | 13 |
| ஜேர்மனி | 6 | 1 | 2 | 9 |
| இத்தாலி | 4 | 4 | 3 | 11 |
| அவுஸ்திரேலியா | 4 | 2 | 6 | 12 |
| ஜப்பான் | 4 | 2 | 3 | 9 |
| ரஷ்யா | 2 | 7 | 3 | 12 |
| பிரித்தானியா | 2 | 2 | 3 | 7 |
| ஜோர்ஜியா | 2 | – | 1 | 3 |
| செக்குடியரசு | 2 | – | – | 2 |
| பிரான்ஸ் | 1 | 7 | 3 | 11 |
| வடகொரியா | 1 | 2 | 4 | 7 |
| அஜர்பைஜான் | 1 | 2 | – | 3 |
| நெதர்லாந்து | 1 | 1 | 3 | 5 |
| ரோமானியா | 1 | 1 | 2 | 4 |
| சுலோவாக்கியா | 1 | 1 | – | 2 |
| சுவிட்சர்லாந்து | 1 | – | 3 | 4 |
| ஸ்பெயின் | 1 | – | 1 | 2 |
| பின்லாந்து | 1 | – | 1 | 2 |
| இந்தியா | 1 | – | – | 1 |
| தாய்லாந்து | 1 | – | – | 1 |
| சிம்பாவே | – | 3 | – | 3 |
| கியூபா | – | 2 | 1 | 3 |
| ஹங்கேரி | – | 2 | 1 | 3 |
| சுவீடன் | – | 2 | – | 2 |
| அல்ஜீரியா | – | 1 | 1 | 2 |
| ஆஸ்திரியா | – | 1 | 1 | 2 |
| கஜகஸ்தான் | – | 1 | 1 | 2 |
| ஹர்கிஸ்தான் | – | 1 | 1 | 2 |
| கொலம்பியா | – | 1 | – | 1 |
| மொங்கோலியா | – | 1 | – | 1 |
| நோர்வே | – | 1 | – | 1 |
| சுலோவேனியா | – | 1 | – | 1 |
| துருக்கி | – | 1 | – | 1 |
| வியட்நாம் | – | 1 | – | 1 |
| உக்ரைன் | – | – | 4 | 4 |
| ஆர்மேனியா | – | – | 3 | 3 |
| பிரேஸில் | – | – | 3 | 3 |
| பெலாரஸ் | – | – | 2 | 2 |
| இந்தோனேசியா | – | – | 2 | 2 |
| சீனா தைபே | – | – | 2 | 2 |
| ஆர்ஜென்டினா | – | – | 1 | 1 |
| பல்கேரியா | – | – | 1 | 1 |
| குரோஷியா | – | – | 1 | 1 |
| எகிப்து | – | – | 1 | 1 |
| மெக்ஸிக்கோ | – | – | 1 | 1 |
| தஜிகிஸ்தான் | – | – | 1 | 1 |
| ரூகோ | – | – | 1 | 1 |
| உஸ்பெஸ்கிஸ்தான் | – | – | 1 | 1 |

## மகனுக்காக தங்கம் வென்ற தாயார்

ஒலிம்பிக் போட்டிகளில் பங் கேற்று வரும் வீராங்கனைகளில் அம்மாக்களும் இடம் பெற்றிருக் கின்றனர் என்பது கவனத்திற் குரிய விடயமாகும்.

பிரிட்டன் மரதன் வீராங்கனை பாவலா ராட்கிளிப், அமெரிக்க டென் னிஸ் வீராங்கனை யோகோ டானி ஆகியோர் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் தாய்மார்களில் குறி பிடத்தக்கவர்கள்.

மேலும் பல வீராங்கனைகள் தங்கள் பிள்ளைகளோடு ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று வருகின்ற னர்.

இத்தாலிய வாட் சண்டை வீராங்கனையான வேலன்டினா ஒரு ஆண் குழந்தையின் தாயாக இருக்கிறார். எனினும் இது அவரது ஒலிம்பிக் சாதனைக்கு தடையாக இருக்கவில்லை. இங்கு அவர் தங் கப்பதக்கம் வென்றதன் மூலம் தொடர்ந்து மூன்றாவது முறையாக ஒலிம்பிக் போட்டியில் தங்கப்பதக் கத்தை வென்று சாதனை படைத் துள்ளார்.

# ஐ.சி.சி சம்பியன்ஸ் தொடர் ஒருநாள் தாமதமாக ஆரம்பமாகும்

## புதிய அட்டவணையும் அறிவிப்பு

(கராச்சி)

மினி உலகக் கோப்பை என்று அழைக் கப்படும் சம்பியன்ஸ் கிரிக்கெட் தொடர் பாகி ஸ்தானில் அடுத்த மாதம் நடைபெறுகிறது.

8 நாடுகள் பங்கேற்றும் இதில் ஏ பிரிவில் இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளும் பி பிரிவில் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, இலங்கை, இங்கிலாந்து ஆகிய அணிகளும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு அணியும் தங்கள் பிரிவி லுள்ள அணிகளுடன் தலா ஒரு முறை மோ தும்.

இதனடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலி ருந்தும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

முதலில் செப்ரெம்பர்11ஆம் திகதி ஆரம்ப மாகுவதாக இருந்த இந்தத் தொடர் ஒருநாள் தாமதமாக செப்ரெம்பர் 12 ஆம் திகதி ஆரம் பமாகுமென சமீபத்தில் அறிவிக்கப்பட்டது.

மேலும் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரண மாக ராவல்பிண்டி மைதானத்தில் போட்டி நடக்காது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து புதிய போட்டி அட்டவணை நேற்று வெளியிடப்பட்டது. இதன்படி இந்திய அணி தனது ஆரம்ப ஆட்டத்தில் நடப்புச் சம் பியன்ஸ் அவுஸ்திரேலியாவை செப்ரெம்பர் 13 ஆம் திகதி எதிர்கொள்கிறது.

புதிய போட்டி அட்டவணை

செப்.10 ஐ.சி.சி விருது வழங்கும் விழா (லாகூர்), செப்.12 பாகிஸ்தான் - மேற்கிந்தி யத் தீவுகள் (லாகூர்), செப்.13 அவுஸ்திரே லியா- இந்தியா (லாகூர்),செப்.14 இலங்கை -இங்கிலாந்து (லாகூர்), தென்னாபிரிக்கா - நியூசிலாந்து (கராச்சி), செப்.15 பாகிஸ்தான் -அவுஸ்திரேலியா (கராச்சி),செப்.16 தென் னாபிரிக்கா -இலங்கை (லாகூர்), செப்.17 இங்கிலாந்து - நியூசிலாந்து (லாகூர்), செப். 18 மேற்கிந்தியத் தீவுகள் -இந்தியா (கராச்சி), செப்.19-நியூசிலாந்து -இலங்கை (கராச்சி), செப்.20 இந்தியா -பாகிஸ்தான் (கராச்சி).

அரையிறுதி ஆட்டங்கள்

செப்.24 முதலாவது அரையிறுதி (கராச்சி), செப்.26 இரண்டாவது அரையிறுதி (லாகூர்), செப்.28 இறுதிப்போட்டி(லாகூர்). (5)

## நான்காம் இடத்திற்கு இலங்கை அணி முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) டெஸ்ட் தர வரிசையில் 108 புள்ளிகளைப் பெற்று இலங்கை 4-வது இடத்திற்கு முன்னே றியுள்ளது. கடந்த வாரம் முடிபடைந்த இந்திய அணிக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 2:1 எனும் விகிதத்தில் வென்றதன் மூலம் ஐந்து புள்ளிகளை மேல திகமாகப் பெற்று இலங்கை 4-வது இடத்தைப் பெற்றுள்ளது. இது வரை 4-வது இடத்தைப் பெற்றிருந்த இங்கிலாந்து அணியை பின் தள்ளியே இலங்கை அணி தற்போது 4-வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இதேவேளை 113 புள்ளிகளுடன் 3-வது இடத்தை வகித்து வந்த இந்திய அணி 1:2 எனும் விகிதத்தில் இலங்கையிடம் டெஸ்ட் தொடரில் தோல்வியைத் தழுவியதன் மூலம் 4 புள்ளிகள் குறைக்கப்பட்டு 109 புள்ளிகளு டன் தனது 3ஆம் ஸ்தானத்தை தக்க வைத் துள்ளது.

தர வரிசையில் ஒரு புள்ளி வித்தியாசத் தில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக காணப் படும் இலங்கை அணி 3-வது இடத்திற்கு முன்னேறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும் அடுத்த வருடம் மே மாதம் வரை எந்த டெஸ்ட் போட்டிகளிலும் பங்கு பற் றாது. இந்நிலையில் இலங்கை அணியின் தர வரிசை முன்னேற்றம் இந்திய அணியின் எதிர்வரும் போட்டி முடிவுகளிலேயே தங்கியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## பழைய உணவினை உட்கொண்ட 4 சிறுவர்கள் வைத்தியசாலையில்

உணவு நஞ்சானதால் அதனை உட்கொண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 சிறுவர்கள் தீவிர சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் தாக்குதலைத் தொடர்ந்து தச்சனாமருதமடுவிலிருந்து இடம்பெயர்ந்து பல இடங்களில் இருந்த பின்னர் தற்போது புதுமுறிப்பில் தங்கியுள்ள புவனேந்திரன் என்பவரின் பிள்ளைகளே பசிக் கொடுமை காரணமாக பழைய உணவினை உட்கொண்டதால் தீவிர சிகிச்சைக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-5)

## இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்து ஐந்து பயணிகள் பலி; 45 பேர் படுகாயம்

அநுராதபுரம் திறப்பனை, கெக்கிராவை பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த இரு பஸ்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஐவர் உயிரிழந்துள்ளதுடன் 45 ற்கும்அதிகமானோர்படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றுடன், சொகுசு பஸ் ஒன்று மோதியதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவத்தில் சிலர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் சிலர் வைத்தியசாலையில் பலியாகியுள்ளனர். சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அநுராதபுரம், கெக்கிராவ,மரதன்கடவில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டோரில் பலரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சம்பவத்தில் காயமடைந்தவர்களில் இரு பஸ்களின் சாரதிகள் மற்றும் நடத்துநர்களும் அடங்குவர்.

விபத்தையடுத்து இரு பஸ்களும் பெரும் சேதமடைந்துள்ளன. விபத்துத் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமாகிய ரஞ்சித் குணசேகர கருத்துத் தெரிவிக்கையில், அநுராதபுரத்திலிருந்து பொலனறுவை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸும் கொழும்பிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதாகத் தெரிவித்தார். (ச-5)

## மோ.சைக்கிள் விபத்தில் ஆசிரியை படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் செம்மணி வீதியில் யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்கு அண்மையில் நேற்றுப் பகல் 11.40 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஆசிரியை ஒருவர் படுகாயமடைந்தார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதாலேயே இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவ் விபத்துச் சம்பவத்தில் செங்குந்தா இந்துக் கல்லூரியில் கல்வி கற்பிக்கும் இருபாலையைச் சேர்ந்த செல்வி க.முருகேஸ்வரி (வயது-36) என்ற ஆசிரியையே காயமடைந்தவராவார்.

படுகாயமடைந்த இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இதேவேளை மற்றைய மோட்டார் சைக்கிளில் வந்தவரும் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## தமிழரின் ஆதரவு இல்லை...

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனது அக்கறையை வெளியுலகிற்குக் காட்டத் தவறிவிட்டது எனவும் இந்திய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் நேற்று முன்தினம் தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார்.

நாராயணன் கூறியதில் எந்தப் பாதகமான கருத்துக்களும் இல்லை. எனது கருத்தின்படி எமது ஜனாதிபதி கூறியவைகளையே அவர் வேறு வார்த்தைகளில் கூறியிருக்கின்றார். நாம் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க வேண்டும்.

ஆனால் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாகவே தீர்வு காணப்பட வேண்டும். இந்திய பாதுகாப்பு ஆலோசகர் கூறியதில் இலங்கைக்கு எதிராக எந்த மோசமான கருத்துக்களும் இல்லை.

அவர் முக்கியமாக இராணுவ நடவடிக்கை வெற்றிபெறும் என்றே கூறியிருக்கின்றார். அத்துடன் அவர் விடுதலைப்புலிகளுடன் பேச்சுநடத்தவேண்டும்எனக்கூறவில்லை. இவையெல்லாம் அதிலுள்ள சாதகமான விடயங்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## இரசாயன...

விடுதலைப்புலிகளின் தலைவர் கருணா அம்மான் பொலனறுவையில் வைத்து வெளியிட்ட கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே இராணுவத் தளபதி இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார். (ச-5)

## ஐ.தே.க...

மாகாண தேர்தல் நடவடிக்கைக் குழுவின் தலைவருமான எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினரின் தேர்தல் நடவடிக்கைகளை முடக்கும் விதத்தில் அரச தரப்பினர் கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது வெட்கக் கேடான விடயம் என்றும் இவ்வாறான செயற்பாடுகளை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் எஸ்.பி.திஸநாயக்க மேலும் தெரிவித்தார். (ச-5)

## நல்லைக்...

சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம்பெறும் இந் நிகழ்வில் வைத்தியகலாநிதி திருமதி ஜெ. கணேசமூர்த்திக்கு யாழ்.விருது வழங்கிக் கௌரவிக்கப்படும். (ந)

## மின்மாற்றி...

பகுதிக்கான மின்சாரம் தடைப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தென்மராட்சி மற்றும் வட்டுக்கோட்டைப் பகுதிகளில் கடந்த ஒரு வார காலமாக இராணுவப் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளதாகப் பிரதேச தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில்...

ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகள் முழுமையடைவதற்கு முன்னதாக நேற்றைய தீ விபத்து அந்த நலன்புரி நிலையத்தில் ஏற்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

திடீரென தீ பற்றியபோது அநேகமான வீடுகளில் ஆட்கள் இருக்கவில்லை என்றும் பிள்ளைகள் வெளியில் விளையாடிக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அநேகமான ஆண்களும் பெண்களும் வேலைக்குச் சென்றிருந்ததாகவும் வேலைத் தளத்திலிருந்தபோது பூந்தோட்டம் நலன்புரி நிலைப் பகுதியிலிருந்து வானளாவ எழுந்த புகை மண்டலத்தைக் கண்டும் தீப்பற்றியமை குறித்துக் கேள்வியுற்றும் தாங்கள் நலன்புரி நிலையத்திற்கு ஓடி வந்து பார்த்தபோது அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிட்டதாகப் பலரும் தெரிவித்தனர்.

வீட்டிலிருந்த பெண்கள், சிறுவர்கள் திடீரென தீச் சுவாலையையும் புகை மண்டலத்தையும் கண்டு தாங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச் சென்றதாகத் தெரிவித்தனர்.

தீயை அணைப்பதற்கு முடியவில்லை என்றும் காற்றுக் காரணமாகதீ அனைத்து மண்டபங்களுக்கும் கண்மூடி கண் திறப்பதற்கிடையில் பரவிட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனினும் விமானப் படையின் தீ அணைக்கும் பிரிவினருக்குத் தகவல் தெரிந்ததும் அவர்கள் வந்து தீயை அணைக்க முடிந்ததே தவிர தீயிலிருந்து எந்தவொரு கட்டடத்தையும் காப்பாற்ற முடியவில்லை என்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் சில தினங்களுக்கு முன்னர் இந்த நலன்புரி நிலையத்தில் தீ பற்றும் என வதந்தி வடிவில் அச்சுறுத்தல் கிளம்பியிருந்ததாகவும் இதனால் பலரும் அச்சமுற்றிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வதந்தியின் பின்னர் இடம்பெற்றுள்ள இந்த தீ விபத்தானது விஷமிகளின் திட்டமிட்ட சதி வேலையா? அல்லது தற்செயலாக இடம்பெற்ற சம்பவமா? என்பது குறித்து அறிவதற்காக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாரிடம் கேட்டிருப்பதாக வவுனியா அரசாங்க அதிபர் எஸ். சண்முகம் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களையும் சேர்ந்த 240 பேருக்கும் உடனடியாக சமைத்த உணவு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் அருகிலுள்ள பாடசாலை மண்டபத்தில் அவர்களைத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் மேற்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியை நாடியிருப்பதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் எஸ். சண்முகம் மேலும் தெரிவித்தார். (ச-5)

## உணவுப் பொருள்கள்...

கட்டுப்பாடுகள் இன்றி விநியோகம் செய்யுமாறு ஐக்கிய நாடுகளின் அகதிகள் காரியாலயம் விடுத்த வேண்டுகோளை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

கொழும்பிலிருந்து கிடைக்கப் பெறும் பொருள்களைக் கொண்டே தமிழீழ விடுதலைப்புலிகள் யுத்தத்தை முன்னெடுத்ததாக உயர் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறான ஓர் சந்தர்ப்பத்தை விடுதலைப்புலிகளுக்கு வழங்க அரசாங்கம் தயாரில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வன்னியில் யுத்தம் காரணமாக அகதிகளாகியுள்ள பொதுமக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஐரோப்பிய நாடுகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளது. (ச-5)

## கச்சதீவில் இந்.தேசிய ...

தும் தாக்குதல்களுக்குள்ளாகி வருவதால் தமிழக மீனவர்களின் பாதுகாப்புக் கோரி கச்சதீவு மீட்புப் போரில் ஈடுபடப் போவதாகவும் இந்து மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

அத்துடன் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு இந்திய மத்திய அரசும் தமிழக மாநில அரசும் கூடிய விரைவில் உரிய பதிலை அளிக்கும் என எதிர்பார்ப்பதாகவும் அந்தக் கட்சி கூறியுள்ளது.

எனினும் மத்திய மாநில அரசாங்கங்கள் உரிய தீர்வை வழங்கத் தவறும் பட்சத்தில் கச்சதீவில் இந்திய தேசியக் கொடி ஏற்றப்படுவதை எவரும் தடுக்க முடியாது எனவும் அந்தக் கட்சியினால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## முழங்காவிலை கைப்பற்றி...

விடுதலைப்புலிகளின் கேந்திர முக்கியத்துவத்துவம் மிக்க இடமாகிய துணுக்காய்க்கு தென்மேற்கில் உள்ள கல்விளான் பகுதியை நோக்கி முன்னேறிய படையினருக்கு எதிராக விடுதலைப்புலிகளின் கடுமையான பல நாள் எதிர்த் தாக்குதல்களுக்குப் பின்னர் இந்தப் பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றியிருப்ப தாக கூறியுள்ள பாதுகாப்பு அமைச்சகம் நேற்று முன்தினம்இந்தப் பகுதியில் இடம் பெற்ற மோதல்களில் 2 விடுதலைப்புலிகளும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றது.

எனினும் இது குறித்து விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து உடனடியாகத் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

இதேவேளை வவுனியா, பாலமோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இராணுவத்தினர் நேற்று முன்தினம் மேற் கொண்ட நடவடிக்கைகளில் 9 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டிருப்பதாகவும் இராணுவச் சிப்பாய் ஒருவர் காயமடைந்திருப்பதாகவும் இராணுவம் தெரிவித்திருக்கின்றது.

வவுனிக்குளம் மற்றும் வெலிஓயா கள முனைகளில் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நேற்று முன்தினம் மேற்கொண்ட தாக்குதல்களில் 5 விடுதலைப்புலிகளும் 4 இராணுவத்தினரும் கொல்லப்பட்டிருப்பதாகவும் இராணுவம் தெரிவித்திருக்கின்றது. (ச-5)


புதிய பிரிவு
A/L - 2010
இந்துநாகரிகம்
S. ஜெயக்குமார் B.A. (Hons)
ஆரம்பம் :- 16.08.2008
சனி காலை - 8 மணி
DMI
ஸ்ரான்லி வீதி, யாழ்.
(C-1402)

PAPER CLASS
A/L - 2009
இந்துநாகரிகம்
S. ஜெயக்குமார் B.A. (Hons)
ஆரம்பம் :- 16.08.2008
சனி காலை - 7.15
வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்.
DMI
ஸ்ரான்லி வீதி, யாழ்.
(C-1403)

புலமைப்பரிசில் மாதிரி இறுதி வினாத்தாள் 2008
வெற்றோர்களே! வெற்றி நிச்சயம்
உங்கள் பிள்ளைகளை உயர்வான புள்ளி எடுக்கச் செய்வோமா?
கேட்டு வாங்குங்கள்
கொழும்பு எக்ஸ்பிறஸ் வெளியீடு

தரம் - 05
1ஆம் வெளியீடு, 2ஆம் வெளியீடு, 3ஆம் வெளியீடு, 4ஆம் வெளியீடு, 5ஆம் வெளியீடு, 6ஆம் வெளியீடு, 7ஆம் வெளியீடு, 8ஆம் வெளியீடு, 9ஆம் வெளியீடு, 10ஆம் வெளியீடு, 11ஆம் வெளியீடு, 12ஆம் வெளியீடு, 13ஆம் வெளியீடு, 14ஆம் வெளியீடு
இறுதிவினாத்தாள் 2008
உடன் விரையுங்கள்
- பூபாலசிங்கம் புத்தகசாலை (யாழ்)
- அன்னை புத்தகசாலை (யாழ்)
- பாக்யா புத்தகசாலை (கொக்குவில்)
- கனகா பத்திரிகை நிலையம் (திருநெல்வேலி)
- கரன் புத்தக நிலையம் (சுன்னாகம்)
- துர்க்கா புத்தகசாலை (சுன்னாகம்)
- ஸ்ராார் புத்தகசாலை (யாழ்.இந்து மைதான அருகாமையில்)
2007 ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட 6 வினாத்தாள்களும் 120/= விற்கு பெற்றுக்கொள்ளலாம்.
* பதிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வினாத்தாள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
* 2009 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கு வினாத்தாள் தேவைப்படும் பாடசாலைகள் தங்கள் எண்ணிக்கையை உடன் பதிவு செய்யவும்.
Note: வினாத்தாள்களின் சரியான எண்ணிக்கையை கணக்கெடுப்பதால் விமானக் கட்டணத்தை மிச்சப்படுத்தக்கூடியதாக இருக்கும்.
பதிவிற்கு: கிளை -05 கொழும்பு எக்ஸ்பிறஸ் வெளியீடு ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.
☎: 060 221 6922 T.P: 0771103395 Fax : 021 222 6293


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.